
# புதிய நிலா

# PUTHIYA NILA

2

தை - பங்குனி 2009



மாணவர்களின் ஆக்கங்களை தாங்கிவரும் முதற்தர சஞ்சிகை.

பிரதம ஆசிரியர்:- K. அஜித்குமார்

வெளியீடு: புதிய நிலா வெளியீட்டுக் கழகம் - கரவெட்டி

# அபிஷா

# நகைமாடம்

அழகிய கலைநயம் ......




எழிலுறு தொழில்வளம் ....

உயர்தரமிகு தங்கநகைகளுக்கு ......

வடமராட்சியில் ......................



பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.



ஜீவநதி ஆசிரியர்
க. பரணிதரனுக்கு

# கலை இலக்கிய சமூக அறிவியல் சஞ்சிகை

இதழ்- 02

**நாளைய சிற்பிகளுக்கான இன்றையஉழி**


**பிரதம இதழ் ஆசிரியர்**
கு.அஜித்குமார்

**இணைஆசிரியர்**
கு.மைதிலி

செயற்பாட்டாளர்கள்
சி.ஜெறாட்றூபன்
உ.மாதுளன்
T.தவநேசன்
S.சர்வன்
சா.பிறேம்நாத்
இ.கபில்றாஜ்

ஆலோசனை
ஆசிரியர்
வேல்.நந்தகுமார்(B.A.Hons Tam.sp)



தொடர்புகளுக்கு
"புதியநிலா"
கு.அஜித்குமார்
"சிவகிரி"
சாமியன் அரசடி
கரவெட்டி



வங்கித்தொடர்புகளுக்கு
**K.Ajithkumar**
Commercial Bank,Nellidy
A/C No :- 8108007512


**பதிப்புரிமை**


புதியநிலா வெளியீட்டுக்கழகம்
கரவெட்டி
T.P :-0771387185
Fax:- 0212263210
Email:- Puthyanila@yahoo.com


**பதிப்பகம்**


லஷ்சுமி ஒவ்செற் பிறின்டேஸ்
நாவலர் மடம் கரவெட்டி


விலை 50/=


K.BHARANEETHARAN
Editor Jeevanathy
Editor Kadal
Kalaiaham


**"முயல்வோம் தொடர்ந்து முன்னேறுவோம்"**

# புதிய நிலாவின் சேவைகள்

**1. பொது அறிவை வளர்ப்போம்**
(பொது அறிவுப் போட்டி)

**2.** அமரர் சிவகாமிசெந்தியா ஞாபகார்த்த வெற்றி தொடர் (கணிதம்)

**3.** கலை இலக்கிய சமூக அறிவியல் மலர்

**4.** தங்கம்மா அப்பாகுட்டி ஞாபகார்த்த சித்திர தொடர்

**5.** அரங்கில் தவழும் குழந்தைகள்
(நாடகமும் அரங்கியலும்)

PUTHIYA NILA EXAM UNIT
PEU
KARAVEDDY

## பரீட்சைப்பிரிவின் ஆசிரியர் குழாம்

முதல் ஆண்டில் தடம் பதித்து

*M.திருமுருகன்*
*T.ஜெயகாந்தன்*
*K.மைதிலி*
*S.யாழினி*
*N.விஜயகுமார்*

# பிரதம இதழ் ஆசிரியரின் இதயத்தின் இயம்பல்............

வாசநெஞ்சங்களே!

முதலாவது இதழிற்கு நீங்கள் தந்த வரவேற்பும் பல மாணவர்கள் அதை பார்க்கும் ஆவலை கண்டு மன நிறைவடைகிறோம். உங்கள் ஆதரவு எம்மை இரண்டாவது இதழில் சந்திக்க வைத்ததில் நாம் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

பொது அறிவை வளர்ப்போம் என்ற நோக்கில் வெளிவந்த எமது பொது அறிவுத் தொடர்யாழ் மண்ணில் அனைவரினதும் நன்மதிப்பைப்பெற்றே இச்சஞ்சிகைக்கு எம்மைத் தூண்டியது இத்தூண்டலின் வெளிப்பாடாகவே புதிய நிலா கலை இலக்கிய சமூக அறிவியல் சஞ்சிகை உங்கள் கைகளில் பர்ணமித்தது அத்தோடு மட்டும் நின்று விடாது பரீட்சை,சித்திரம், நாடகமும் அரங்கியல், ஆகிய பல தரப்பட்ட துறைகளிலும் வெளியீடுகளை மேற் கொண்டு வருகிறது. இச் செயற்பாடானது யாழ் மண்ணில் மட்டுமல்லாது அகில இலங்கை ரீதியில் பிரசுரமாகும் என்ற எதிர்கால கனவோடு இச் சஞ்சிகையை வெளியிடுவதில் பேருவகை அடைகின்றேன்.

கடந்த காலத்தில் சில சஞ்சிகைகளோடு ஏற்பட்ட முரண்பாடுகளுக்காய் மனம் வருந்துகின்றோம் எந்த சஞ்சிகையுடனும் முரண்படும் எண்ணம் எமக்கில்லை. அக் கருத்துக்கள் படைப்பாளியின் சொந்தக்கருத்துக்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம். பிறையாக இருக்கும் நிலா பௌணர்மியாய் பர்ணமிக்க உதவுங்கள். உங்கள் எதிர்கால எழுத்துலக கனவுகளுக்கு களம் அமைத்துக் கொடுக்க நாம் தயார். கல்விப்புலம் சார்ந்தவர்களின் ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

"நோக்கத்தில் உறுதி செயலில் நம்பிக்கை"

## நிலாவின் உள்ளே.........................


**01. கவிதைகள்**

1. எங்கள் குழந்தைகள்
2. உயர்ந்த உயிரினம்
3. தாயின் மகத்துவம்
4. மனதால் உயர்ந்த உத்தமிக்கு
   மனம் நெகிழ ஒரு மடல்
5. தன்நம்பிக்கை
6. மந்தம்

**02. சிறுகதை**

1. இரப்பவர்கள்
2. சுமைதாங்கி
3. பெண் ஒன்று பிறந்துவிட்டால்

**03. கட்டுரை**

1. மாணவர்களின் கல்வியில் ஆசிரியரின் பங்கு
2. நவீன அறிவியலும் ஒளி நாடாவின் புதுமையும்
3. இசையுலக ஆட்டநாயகன் ஏ.ஆ.ராஹ்மான்
4. **Bond between Science and Arts-**
5. **Genetic Engineering**

**04. சுவைத்திரள்**

**05. தமிழறிவு வினாவிடை**

**06. அறிவியல் உண்மைகள்**

**07. பாராட்டுக்குரியவர்கள்**


அட்டைப்படம்:- ந.விஜயகுமார் யாழ்ப்பாண தேசிய
கல்வியற் கல்லூரி, கோப்பாய்



## எங்கள் குழந்தைகள்

துவாரகன்

எங்கள் குழந்தைகள்
வீடுகளைகத் தொலைத்து விட்டார்கள்
எங்கள் குழந்தைகள்
வீதிகளைத் தொலைத்து விட்டார்கள்
எங்கள் குழந்தைகள்
சிரிப்புகளைத் தொலைத்து விட்டார்கள்
இனியும்
அவற்றைத் தேடிக் கொள்வோம்
என்ற நம்பிக்கை
எங்கள் கைகளை விட்டு
தூரப் போய் விட்டன
படகோட்டி தன் துடுப்பைத் தொலைத்து
விட்டது போல்
இப்போ எங்கள் குழந்தைகளுக்குத் தேவை
வானவில்லும் நட்சத்திரங்களும் அல்ல
நடந்த களைப்புத் தீர
ஒரு முள்ளில்லா பற்றை
தாகம் தீர்ப்பதற்குக்
கொஞ்சம் குடிதண்ணீர்


நிலா வளர வாழ்த்துகிறோம்...

**மருதா றபர்சீல்,பொலமர் சீல்**

தொழிற்சாலை



**Plstic Name Board & Polymer Seal Works Shop**

*சிறந்த முறையில் பிளாஸ்டிக் பெயர்ப் பலகைகள் பாடசாலை பட்ஜ்கள் வாகன் இலக்கத்தகடுகள், பொலிமர் சீல் செய்பவர்கள்*

452,(318) கே.கே.எஸ் வீதி 452(318) K.K.S.Road

# உயர்ந்த உயிரினம்

பொன். சுகந்தன்
நெல்லியடி

உயிரற்ற முகம் போன்றே
உதடும் சிரிப்பும் வற்றி
உறைந்த பனிக்கட்டி
உயிரினம்.....!
உள்ளமும் அற்று
உணர்வும் வற்றி
உலகுதனில் உலாவரும்
உயிரினம் உலகின்
உயிரியற் பூங்காவில் ஆதியில்
உள்ளனவா எண்றெண்ணியே
உன்னதமாய் தேடுகின்றேன்.....!
உயிரற்ற உடல் போன்றே
உள்ளமற்றே உலாவிவரும்
உருவம் என்றும்
உலகில் இருந்ததில்லையெனவும்
உருவான இத்தகைய
உருவமிது மானிட
உடலின் பரிணாம வளர்ச்சியெனவும்
உறுதியான ஆய்வுகள் தான் சொன்னதே!

நிலா வளர வாழ்த்துகிறோம்...
மிதுர்ஷன் மிதிவண்டி விற்பனை நிலையம்

சகலவிதமான மிதிவண்டி உதிரிப்பாகங்கள் பெற்றுக் கொள்ள
வல்வெட்டித்துறையில் சிறந்த ஒரு விற்பனை நிலையம்
வேம்படி வல்வெட்டித்துறை



# தாயின் மகத்துவம்

என்னைப் பெற்ற அம்மா
இன்பம் தந்த அம்மா
பொன்னை தந்த அம்மா
புத்தி கூறும் அம்மா
அடம் பிடித்த நாளும்
அழுது நின்ற போதும்
அரவணைத்து அன்பு காட்டி
கடமை தவறா காத்து என்னை
வெள்ளி நிலவைக் காட்டி
வேண்டும் அமுதை ஊட்டி
பள்ளி செல்லும் என்னை
அன்புடன் பார்த்து மகிழ்ந்து
வீர வெற்றிக் கவிதைகள் விருப்புடனே சொல்லி
வீரனாக வேண்டும் என்னை
தாயைப் போல் உலகில் யாரும் உண்டே?
தெய்வம் என போற்றி தினமும் வாழ்வோம்.

**அ.செலின்மஞ்சிகா**
**யா/வேம்படி மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

**இச் சஞ்சிகையில் இடம் பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய படைப்பாளிக்கே உரித்தானது பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும் படைப்புக்களை செம்மை படுத்த ஆசியருக்கே உரிமை உண்டு::**

# மனத்தால் உயர்ந்த உத்தமிக்கு மனம் நெகிழ ஓர் மடல்.........

ரவிஷாந்
வீரமனை, குப்பிளான்

இறைபணிக்கே வாழ்வென்றே நம்பிக்கை
கொண்டு
நிறை பணியில் எந்நாலும்
நின்ற பெரியோர்
எண்ணியதை எண்ணியாங்கு
செய்து முடிக்கும்
ஏற்றமிகு செயலின் நாயகி
சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
என்னும் நாமமுடையோர்

மக்கள் சேவையே மகேசன் சேவையென
சிக்கல் பல வந்த போதும்
சிறிதும் மணங் கோணாமல்
ஒப்புவித்த உள்ளத்துணர்வினார்
சீர்பெருக சைவ நீதி தழைத்தோங்க
தீந்தமிழர் சமய வாழ்வு செழிப்பு எய்த
சீதக் கமல முகச் செந்தமிழ்ச்செல்வி
திக்கெட்டும் புகழ் பரப்பி
செய்த பணிகள் எத்தனை?
அன்புக்கு இலக்கனமாய் வாழ்ந்து
அகிலத்தில்
அறிவிற்கு நல்ல ஆசானாய்
அகத்தினில் நிறைந்தீர்!
அரும் பெரும் சைவ சீலம்
அழுவது கண்டு அகமகிழ
அங்கெல்லாம் திருப்பணிகள்


ஆற்றி நின்ற அன்னையே!
அன்பொழுக பண்பொழுக
அவனியிலே நீங்கள் செய்த சேவை
ஆயிரமாயிரமாய் ஆண்டுகளானாலும்
அழியாது நிலைத்து நிற்கும்
அருமையான சேவையே.
சித்தமதில் என்றுமே சிறப்பான
சிந்தனை கொண்டு
சிவப்பணியை மிகவும்
திறம் படச் செய்து காட்டியவரே!
சமூக மக்களின் பாராட்டையும் பெற்றவரே!
பண்பினிலே உயர்ந்த பெரும் பேரறிஞையே!
பார் போற்ற வாழ்ந்த தேசாபமானியே!
இந்து சமயத்தின் இமய விளக்காய்
எத்தனை எத்தனையோ இயற்பணி ஆற்றினீர்!
இந்து பணிக்காய் செல்வங்களை
இல்லையெனாது ஈந்திட்டீர்!
துர்க்கா புரத்தின் நாயகியாயிருந்த
நாற்றிசையும் புகழ்ந்திடவே
நற் தொண்டுகள் பல புரிந்தீர்
இல்லையெனாது ஈந்திடும் குணமும்
இன் முகமும் இன் மொழியும்
இன்ன பல பெருமைகளுடன்
எமக்கென நீண்ட சேவை செய்தீர்
உங்களை எப்படி மறப்போம்?
சிறுவர் அனாதையரின் திருத்தாயாயிருந்து
மகளிர் வாழ் இல்லச் சிறார்கள்
மகிழ்வுடன் வாழ மாபெரும் பணிகளாற்றி
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த அம்மையே!
சைவத்தமிழ் மேன்மையுறச்
சாற்றிய பணிகளோ பற்பல
ஊரெல்லாம் நின்று கூடி
உன் திருவுருவைக் காண
நீரெல்லாம் கண்கள் மல்க
நிற்பதை அறியாய் தானோ

சித்தமதில் என்றுமே சிறப்பான
சிந்தனை கொண்டு
சிவப்பணியை மிகவும்
திறம் படச் செய்து காட்டியவரே!
சமூக மக்களின் பாராட்டையும் பெற்றவரே!
பண்பினிலே உயர்ந்த பெரும் பேரறிஞையே!
பார் போற்ற வாழ்ந்த தேசாபிமானியே!

கண்ணின் கருமணியாய்த் திகழ்ந்து
காலமெல்லாம் கருத்தான சேவை புரிந்து
மாண்புக்கோர் அச்சாணியாய்!
வாழ்ந்து காட்டிய அன்னையே!
சொல்லாமற் போனதெங்கே
சொக்க நாதரிடம் தானோ!
சீரணி புகழ் விளக்காய்
சீமாட்டியே வாழ்வீர்
நீவீர்! கண்ணுதலான சிவன் கழலில்
உமது ஆத்மா கருத்தொன்றிச்
சிவபதத்தில் பெற்றிடுக சாந்தி

உங்களிடமிருந்து ...........

உவகையுடன் எதிர்பார்க்கின்றோம் ஆக்கங்களை இச்சஞ்சிகையில் பிரசுரிப்பதற் கேற்ப ஆக்க பூர்வமான படைப்புக்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.



# தன் நம்பிக்கை

துன்பங்களில் தத்தளிக்கும்
மானிடா!
உன் துன்பங்களை
மூட்டை கட்டி எரித்து விடு
வாழ்வில் நீ உயர வேண்டுமெனில்
உனது மனதில் தன் நம்பிக்கை – எனும்
விதையை விதைத்து விடு

திட்ட மிடு நண்பா!
எடுத்தவுடன் ஏணியின்
உச்சியை அடைய முயற்சிக்காதே – உன்
ஒவ்வொரு திட்டத்தையும்
படி முறையாக நிறைவேற்று
அவ் ஒவ்வொரு படிகளிலும் – உன்
கால்த் தடம் தன் நம்பிக்கையோடு பதியட்டும்
தன் நம்பிக்கை தான் கடவுள்
உன்னில் தன்னம்பிக்கை இருந்தால்
சகாராவிலும் பூக்கள் சிரிக்கும்

**கெ.ஆனிந்சாறா**
**யா/புனித தெரேசாள் மகளீர்க் கல்லூரி**
**அச்சுவேலி.**

**முயற்சியும் தன்னம்பிக்கையும் உடையவர்களை காலம்**
**கைதூக்கி விடுகிறது; அதையே அதிர்ஷ்டம் என்கிறோம்**
**-மண்ட-**

# மந்தம்

க.சுதர்சனி
தும்பளை.

அந்தரத்திலே
பறந்து பறந்து
அடியாள்களை
பந்தாடும் நாயகன்
தாய் தன் மக்களுக்கு
உள்ளாடையை
மறைத்த காலமொன்று இருந்தது
உள்ளாடையோடு உலா வந்து - தமிழை
உளறி விட்டு போகும் நாயகிகள்
இரட்டை அர்த்தத்தில் பேசுவான்
நகைச்சுவை நடிகன்
வன் முறைக் கலாசாரத்தையும்
வக்கிர புத்தியையும் தவிர
வலிமையான திரைக்காவியம் ஒன்றை
வழங்க இயலவில்லை உங்களால் .....
குறிஞ்சிப் பூவாய் மலரும் ஒரு சிலவும்
குழி தோண்டி புதைக்கப்படும்
கதையோடு சேர்ந்து இழுபடும் கமரா
அர்த்தமேயில்லாத பாடல்கள்
ஆர்ப்பாட்டமான இசையோடு
கதா நாயகன் மேய்பவனாக
கதா நாயகிகள் மேய்ச்சல் நிலமாவர்
தேகத்தை சுற்றி சுழல்பவர்களோ
அகத்தை மாற்றும் சக்தி இல்லையோ?
வெற்றி என்பது
வசூலை பொறுத்தது
தரமான தயாரிப்புகளும்
நாயக விம்பத்துள்
நசுங்கிப் போகும் - இந்த
கூஷிகூஷிசீனி- மா வைத்தின்று தின்று
வந்த வருத்தம்
மந்தம்
சுயசிந்தனை இல்லாதவரை - மாட்டிய
சகதிக்குள் இருந்து மீள இயலாதே!

நிலா வளர வாழ்த்துகிறோம்...

*RAM COMMUNICATION*





**Laminating Scanning**
**Printing Typing - internet**
**Mail, IDD call,Local& faxservices**

**Fax :-212222007**
**0212228428**



**6 Hospital Road,**
**Jaffna**
**E.mail.ram.com@yahoo.com**



நிலா வளர வாழ்த்துகிறோம்...

குருநாதர் காட்வெயார் ஸ்ரோர்ஸ்

சகல விதமான

கட்டடப்பொருட்களுக்கும்

நாட வேண்டிய ஒரே இடம்

வல்வெட்டித்துறை வீதி
உடுப்பிட்டி

# இரப்பவர்கள்



அதிகாலையிலேயே எழுந்து சிவபுராணம் ஓதிக் காலைக்கடன் முடித்து, குளித்து "சிவசிவ" என்று திருநீறு அணிந்து விட்டு சுவாமிப்படங்களுக்கு மாலை போட்டுக் கொண்டிருந்தார் சரவணன்.

சரவணனுக்கு நாளை அறுபதாவது வயது நிறைகிறது. இன்றுடன் அவர் தனது திணைக்களப் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவரைக் கௌரவிக்கும் விழாவையும் இன்றே நடத்தி விட வேண்டும் என்பதில் அலுவலக ஊழியர்கள் அக்கறையாக இருப்பது பற்றியும் அவர் அறிந்திருந்தார்.

படங்களுக்குப் பூமாலை சூட்டிவிட்டுத் திரும்பிய சரவணனை தேநீர்க் குவளையும் கையுமாக எதிர் கொண்டாள் பர்வதம். வயதின் களைப்பை விட அதிகமாக களைப்புடன் தோற்றமளித்த அவளைப் பார்க்கும் போது சரவணனுக்கு எங்கோ ஒரு மூலையில் உறுத்தல் தோன்றியது. "என்னை நம்பி வாழ வந்தவளுக்கு என்ன சந்தோசத்தைக் கொடுத்தேன்.........." தனக்குள் பொருமிக் கொண்டே தேநீரைப் வாங்கிப் பருகலானார்.

சரவணன் பர்வதத்தைக் கைப்பிடித்துப் முப்பத்தைந்து வருடங்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. தனது இருபத்தைந்தாவது வயதில் பத்தொண்பது வயதுப் பெண்ணான பர்வதத்தை அவர் கைப்பிடித்த போது அவள் என்னென்ன கனவுகள் கண்டிருப்பாள்............? கடற்கரை என்றும், படக்காட்சிகள் என்றும், கேளிக்கை என்றும் கனவு காணமலா இருந்திருப்பால்............? நகை நட்டுக்கள் பூட்டி அழகாக இருக்க வேண்டும் என்று விரும்பாமலா இருந்திருப்பால்.............?

திருமணமாகிச் சில நாட்களிலேயே தன் கணவனின் குணவியல்புக் கேற்பத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டாள் பர்வதம். சரவணனின் ஆசையே அவள் ஆசையானது. அவரின் வாழ் நெறியே அவளுக்கு வாழ் நெறியானது. படக்காட்சி, கடற்கரை என்ற ஆசைகள், கோயில்கள், திருவிழாக்கள் என மாறின. நகை நட்டுக்களின் அழகை திருநீறு சந்தனம் அணிவதில் நிறைவு செய்து கொண்டாள்.

சிறுவயதில் இருந்தே சரவணனுக்கு இறை ஈடுபாடு, சிவ நெறியில் வாழ்தல் என்பவை இனிமையாக இருந்தன. அவரது பெற்றோர்களும் அவ்வாறே வாழ்ந்து விட்டதால் சரவணனுக்கு இவ்வியல்புகள் தாமகவே ஒட்டிக் கொண்டன. பொதுமக்கள் தங்களையும் கவனிக்க வேண்டியது நியாயமானது தானே, என்ற கருத்துப்பட எடுத்துரைத்தார்கள். இரண்டு பக்கமும் நன்மை பெற்றுக் கொள்வதால் இங்கே "பாவம்" என்ற வார்த்தைக்கு இடமேது, என்றும் கூறினார்கள். புத்திசாலித்தனமாக நடக்காவிட்டால் எப்படி வாழ நேரிடும். என்பதற்கு உதாரணமாகச் சரவணனையே காட்டினார்கள்.

விஸ்வன் ஒரு நாள் அவரிடம் வலியவே வந்தான். சக உத்தியோகத்தர்களின் போதனை பற்றியும் சரவணன் வாழ்வின் சோதனை பற்றியும் கேட்டான். சரவணன் சிரித்துக் கொண்டே கூறினார். "தம்பி பணம் உழைக்க ஆசையில்லை என்று நான் சொல்லமாட்டேன். எனக்கு மனைவியும் ஒரு மகளும் இருக்கின்றார்கள் அவர்களை நல்ல படியாக வாழவைக்க வேண்டியது என் பொறுப்பு என்பது எனக்கு விளங்காமல் இல்லை, ஆனால் அவர்களிடம் கொண்டு சென்று கொடுக்கும் ஒவ்வொரு ரூபாயும் நேர்மையான வழியில் வந்ததாக இருக்க வேண்டும், என நான் விரும்புகிறேன். அவர்கள் பயன்படுத்தும் பணத்தில் எவருடைய கண்ணீரோ வயிற்றெரிச்சலோ கலந்து விட கூடாது அல்லவா........... எனது மரணத்தின் பின் எனது மகள் வாழத் தொரியதவனின் மகள் என்று பெயரெடுத்தாலும் பரவாயில்லை ஊரை ஏமாற்றி வாழந்தவனின் மகளென்று பெயரெடுக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறேன்". சரவணன் மறந்த போதும் இந்தச் சம்பவம் விஸ்வனின் மனதில் அழமாக பதிந்து விட்டு இருந்தது.

சரவணன் அலுவலகத்துக்கு வந்த பொழுது அலுவலக மண்டபம் அலங்காரம் செய்யப்பட்டிருப்பதைக் கண்டார். அவருக்கு உள்ளுக்கு மகிழ்ச்சியில்லாமல் இல்லை. தன்மேல் சக ஊழியர்கள் கொண்டிருக்கும் அன்பு அவரை நெகிழச்செய்தது.

சரவணன் வழக்கம் போலக் கடைசி நாள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். "சரவணன் இன்றுடன் நீங்கள் ஓய்வு பெறப்போகிறீரகளே..... இன்றைக்காவது பணிசெய்யாமல் இருக்கக்கூடாதா?" சக அதிகாரி கணபதிப்பிள்ளை கேட்டு வைத்தார். "செய்யும் தொழிலே தெய்வம் அல்லவா......தெய்வத்தை இந்த ரூபத்தில் இன்றுதானே கடைசியாகக் காண்கிறேன். அதைக் கெடுத்து விடாதீர்கள்........"

சரவணன் சிரித்தபடியே பதில் கூறினார். கணபதிப்பிள்ளை புன்முறுவலுடன் சென்றுவிட்டார். அலுவலக நேரம் முடிந்து விட்டது. அலுவலுக மண்டபத்தில் சரவணன் நாயகனாக அமர்ந்திருக்க பிரியாவிடை நிகழ்ச்சி ஆரம்பமானது. சரவணனின் நேர்மை, உண்மை, உழைப்பு என்பவை பற்றி ஒவ்வொரு பேச்சாளரும் உயர்வாகப் பேசினார்கள்.

அலுவலகத்தின் மாவட்டத்தலைவர் கூட சரவனின் நேர்மை கருதி நிகழ்ச்சியில் கருசணையுடன் பங்கு கொண்டிருந்தார். தனது உரையில் போது சரவணனின் கடமையுணர்வு உழைப்பு பற்றி நிறையவே பேசினார். சரவணனின் நேர்மை பற்றி பெருமிதத்துடன் குறிப்பிட்டார். மற்றையோரின் பேச்சைக் காட்டிலும் மாவட்ட தலைவரது பேச்சைச் சரவணன் உள்ளூர மகிழ்ச்சியுடன் ரசித்துக் கொண்டார். “அவர் ஒரு நேர்மையான மனிதர்” என்று நினைப்பு சரவணனின் உள்ளத்தில் ஆழப்பதிந்து இருந்ததால் சொல் ஒன்றும் செயல் வேறொன்றுமாக இல்லாது அவரது பேச்சு சரவணனை ரசிக்க தூண்டியது.

அலுவலகத் தலைவர் எழுந்தார். சரவணனின் ஒய்வு கால வாழ்க்கை சந்தோசமும் அமைதியும் கொண்டதாக இருக்க வாழ்த்தி பண முடிப்பொன்றைப் பெற்றுக் கொள்ளும் படி அழைத்தார். சரவணன் குறுக்கிட்டார். “முதலில் என்னைச் சில கருத்துகள் கூற அனுமதியுங்கள். அதன் பிறகு பண முடிப்பைப் பெற்றுக் கொள்வதைப் பற்றி யோசிப்போம்.....” என்றார். தலைவரும் அனுமதித்தார்.

சரவணன் பேசத் தொடங்கினார். “உங்கள் அன்புக்கு என்றும் நான் கட்டுப்பட்டவனே, எனினும் உங்களால் வழங்கப்படவுள்ள இப்பண முடிப்பை ஏற்பதில் எனக்கு சிக்கல் உள்ளது. அது என்னவென்றால், பகட்டான உடை, வசதியான வாழ்க்கை என்பவை கொண்ட பார்வையின் அவை அற்ற நான் எழை போல் தோற்றமளித்தாலும், என் பார்வையில் உங்களிற் பலர் பரிதாபத்திற்குரிய ஏழைகளாகவே இருக்கிறீர்கள்.

இந்தத் திணைக்களத்துக்குத் தன் அலுவல் நிமித்தம் வரும் பொதுமகன் ஒருவன் உங்களுக்குப் பணம் கொடுத்து காரியம் பெற வேண்டிய நிலையிருக்கும் வரை நீங்கள் என்னதான் வசதிகளோடு வாழ்ந்தாலும் ஏழைகள் நாம். அரசால் வழங்கப்படும் சம்பளம் போதாதது. என்ற நிலையில் தானே உங்களிற் பலர் பொதுமக்களிடமிருந்து பணத்தைப் பெறுகின்றீர்கள். இது ஒரு வகை இரக்கத்திற்குரிய இரத்தில் அல்லவா..............

நீங்கள் இன்னும் இரக்கின்ற நிலையில் கைவிடாத வகையில் உங்களால் வழங்கப்படும் இந்தப் பணத்தைப் பெற்றுச் சென்றால் நான் உங்கள் போதாமையைத் தானே ஆதரிக்கின்றேன். இது சரியாகாது இரப்பவரிடமிருந்து பணம் பெறும் பாவம் என்னைச் சேரக் கூடாது என நம்புகிறேன்.

சரவணன் பேசிக் கொண்டே போனார். சரவணனின் பேச்சில் கிறங்கிப் நேராக நிமிர்ந்து உட்கார்ந்தான். போனவை எடுத்து ஒரு தாளில் ஆழமான சிந்தனையடன் எழுதினான். “ஐயா உங்கள் நேர்மை என்னைப் பெருமை கொள்ள வைக்கிறது. உங்கள் மகளை நான் நேரில் கண்டதில்லை. உங்கள் ஆசியுடன் உங்களை என் மாமனாராகப் பெற்றுக் கொள்ள நேரின் பெரும் பாக்கியமாக கருதுவேன். இது என் ஆழமான தீர்க்கமான முடிவு. உங்கள் வீட்டில் ஆலோசித்த பின் முடிவைத் தெரிவியுங்கள்.......?

சரவணன் பேசி முடியும் வரை ஒரே அமைதி. திணைக்களத்தின் மாவட்டத் தலைவர் சரவணனைப் பெருமிதமாக ரசித்துக் கொண்டிருந்தார். சரவணனுக்கு பணமுடிப்பு வழங்கும் தைரியம் எவருக்கும் வரவில்லை. சரவணன் வெளியே வந்தார் மாவட்டத் தலைவர் எழந்து வந்து சரவணனை கட்டித் தழுவி வாழ்த்தினார்.

அலுவலக வாசலில் காத்து நின்ற விஸ்வன் சரவணனிடம் கடிதத்தை நிட்டியபடி “ஐயா ஒரு விண்ணப்பம்...... இந்தக் கடிதத்தை வீட்டில் கொண்டுபோய்ப் பாருங்கள்” என்றபடி பவ்வியமானான்.

புன்முறுவலுடன் கடிதத்தை வாங்கிக் கொண்டே சரவணனின் மனதில் பெரிய நிம்மதி கோலமிட்டது. கம்பீரமான அந்த அலுவலகக்கட்டடத்தைத் திரும்பிப் பார்தார். அது கோயிலாகத் தெரிந்தது.

**க.கோணேஸ்வரன்.**
**திருகோணமலை**



# சுமை தாங்கி

ஓங்கி வளர்ந்து பல கிளைகளையும் பல விழுதுகளையும் கொண்டு அவ்வூரில் நடு நாயகமான ஆலமரம் கம்பீரமாக காட்சி அளித்தது. அம் மரத்தில் பள்ளி கொண்ட புள்ளினங்கள் காலைப் பொழுது புலரப் போகின்றது. என்பதை அவ்வூர் மக்களுக்கு கட்டியம் கூறுவது போல கூவின. அந்த ஆலமரத்திற்கு அருகாமையில் ஒரு சிறு குடிசை இருந்தது. அதற்கு அப்பால் வைரவர் கோவில். கோவில் மணியும் ஒலித்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை ஆகையால் சுந்தரமும் அவனது நான்கு பெண் குழந்தையும் நித்திரையில் இருந்து எழும்பவில்லை. சுந்தரத்தின் மூத்தபிள்ளை ரவி கல்வியில் அக்கறை கொண்டவன் அதிகாலையில் எழுந்து ஏதோ ஒரு பாடத்தை மனனஞ் செய்தபடி இருந்தான். அதற்கு குப்பி விளக்கும் இசைந்து கொடுத்தது. தாய் கமலமணி மகனுக்கு தேநீர் ஊற்றிக்கொண்டு வந்து தன் மகனுக்கு கொடுத்தாள். கொடுத்ததன் பிற்பாடு மகன் இருந்த விறாந்தைக்கு பின்பும் உள்ள திண்ணையை எட்டிப்பார்த்தான். அங்கே சுந்தரமும் பிள்ளைகளும் எழும்பவே வில்லை என்பதைக் கண்ட கமலமணி அவர்கள் அருகிலே சென்று என்னப்பா விடிந்து எவ்வளவு நேரமாச்சு எழும்புங்கோ என்று கணவன் சுந்தரத்தை எழுப்பினாள்.

அருகில் படுத்திருந்த தன் சின்னமழலைச் செல்வங்களை தன் கைகளினால் தடவி அவர்களுக்கு அன்பு வார்த்தைகளைச் சொல்லி அவர்களை எழுப்பினாள். அவர்கள் மொதுவாக கண்ணைத் துறந்தார்கள். அதன் பின்னர் ஒவ்வொருவராக மெதுவாக எழுந்து காலைக்கடன்களை செய்வதற்காக வெளியேறினார்கள். ஆனால் ரவி மட்டும் புத்தகமும் கையுமாக இருந்தான். கமலமணி அடுக்களையில் இருந்து கொண்டு ரவி இண்டைக்கு ரீயூசனுக்கு போகவில்லையா? என்று தன் மகனைக் கேட்டாள். அதற்கு அவன் பதில் எதுவும் சொல்லாமல் தாய் இருந்த அடுக்களைப்பக்கமாக சென்றான். சென்றவனை எதிர் கொண்டு பாத்தாள். பார்த்தமாத்திரம் என்னடா மௌனம் சாதிக்கிறாய் என்ன நடந்தது சொல்லு என அதட்டலாக மகனைப் பார்த்து கேட்டாள். ரவியின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றும் நிலத்தை முத்தமிட்டன. என்னர ராசா ஏனடா அழுகின்றாய். என்ன விசயம் பயப்படாமல் சொல்லு என மகனை கட்டித் தழுவி கண்களிலிருந்து வழிந்தோடு கண்ணீரைத் துடைத்தபடி கேட்டாள்.

அதற்கு தன் தாய் முகத்தை பார்த்தவாறு ரவி அம்மா, அம்மா, இரண்டு மாதரீயூசன் காசு கட்டவேணும் எப்படியாவது யாரிடமாவது வாங்கித் தாருங்கள். இல்லை என்று சொன்னால் நான் ரீயூசனுக்கு போகவில்லை என தாயிடம் ரவி சொன்னான்.என்ன செய்வது கடன் பட்டு செய்த தோட்டமும் காலைவரி விட்டது. இப்ப தோட்டத்திற்கு செலவழிந்த கடன் காசு இப்பதிரிப்பிக்கட்ட வசதியில்லை போறக் குறைக்கு நீயும் ரீயூசன்காசு கேட்கிறாய என்ன செய்ய கண்கெட்ட கடவுளும் எங்களைப் போட்டு வதைக்கின்றான். என தன் மகனைப் பார்த்து கண்ணீர் கலந்த கதையினை சொன்னாள். தன் தாயின் முகத்தை பார்த்த ரவிக்கு என்ன செய்வது என்று தெரியாது. அடுக்களையைவிட்டு வெளியே வந்தான்.

நேரமோ ஆறுமணியாகிவிட்டது. சூரியன் மெதுவாக கிழக்கு திசையில் அணுகத் தொடங்கினான். வெளியே வந்த ரவி முற்றத்தில் அங்குமிங்கும் யோசித்த படி நடந்து கொண்டிருந்தான். அப்போது வானத்தை அண்ணாந்து அங்கே ஐந்தறிவுள்ள புள்ளினங்கள் பல ஒன்றாக இரைதேடுவதற்காய் சென்று கொண்டிருந்தன. ஆம் அதை அவதானித்த ரவிக்கு தனக்குள்ளேயே இந்த பறவைகளுக்கு இருக்கும் சுகந்திரம் எனக்கில்லையே! என தன் மனதை ஒரு முறை கேட்டுப்பார்த்தான். தன்னிலையை மறந்து கண்ணீர் விட்டான்.

அப்போது கிணற்றடியிலிருந்து தந்தையும், தங்கைமார்களும், உள்ளே நுழைந்தார்கள். உடனே அவர்களைக் கண்ட மாத்திரத்தில் கண்ணிலிருந்து வந்த கண்ணீரைத் துடைத்தபடி அப்பா உங்களட்டை நூறுரூபாய் காசு இருக்கிறதா. என தந்தையாரை ரவியும் எதிர்பார்ப்போடு வினாவினான். அதற்கு தந்தையாரின் வாயிலிருந்து இல்லை என்ற வார்த்தையை தவிர எதுவும் வரவில்லை. உடனே முற்றத்தில் நின்ற சைக்கிளை எடுத்துக் கொண்டு வைரவர் கோவில் முன்றலில் உள்ள வேப்பமரத்தடிக்கு சென்றான். அந்த வேப்பமரத்தோடு சைக்கிளை நிறுத்தி விட்டு அந்த மரத்தடியின் கீழே படுத்திருந்தான். அவனுக்கு தன் குடும்பம் மீது அதீதபாசம் கொண்டவன். அதனால் அவர்களும் தன்னைப் போல் கஷ்டப்படுகிறார்கள் என வருந்தினான். தன் பாசஉறவுகளை நினைத்து கண்ணீர் விட்ட வண்ணம் கடவுளே! பிறந்தால் ஏழையாக பிறக்கக் கூடாது அதுவும் என்னைப் போல பிறக்க கூடாது. என தனக்குள்ளே கூறிக் கொள்வது போல் சிந்தித்தான். தன் தந்தை ஒரு விவாசி அத்தோடு ஒரு நோயளியும் கூடவே ஆகையினால் எங்களை எவ்வளவு காலம். எங்களைக் காப்பாற்றுவது அவருக்கு வயது போய் விட்டதே. இனி யார் தான் எங்களுக்கு உதவி எனக்கு தாய்வழி உறவு

தந்தைவழி உறவு ஆயிரம் பேர் இருக்கின்றனர். இருந்தும் என்னபயன் என தன் உள்ளக்குமுறலை அந்த வேப்பமரத்தடியில் தனிமையில் புலம்பினான்.

சிறிது நேரத்தின் பின்னர் வானத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு நேரமோ பதினொருமணியாகிவிட்டது. பசியும் வயிற்றை கிள்ளுகிறது. எனக் கூறி சைக்கிளை எடுத்துக் கொண்டு வீடு நோக்கி புறப்பட்டான். வருகின்ற வீதியின் இரண்டு பக்கமும் பார்த்தபடி வந்து கொண்டிருந்தான். எதிர் பாரத விதமாக அவனது வீரசிங்க மாமவை அவன் கண்டு ஆனந்தமடைந்து மாமா...மாமா..... என இரண்டு முறை கூப்பிட்டான். திரும்பிப்பார்த்த மாமன் நல்லவிஷயமாக வெளியிலே போகும் போது ஏன் சனியனே என்னைக் கூப்பிடுகிறாய். என கோபத்தோடு ரவியைப் பார்த்து மாமன் கேட்டான். ஒண்டுமில்லை மாமா எனத் தயங்கினான். என்ன தயங்குகிறாய் என்ன என்று சொல்லு என ரவியை நோக்கி வீரசிங்க மாமா வினாவினார் அதற்கு ரவி ரீயூசன் காசு கட்டவேணும் அதுதான் உங்களிடம் காசு கேட்டுப் பார்போம் என கூப்பிட்டேன் . என ரவி மன்றாட்ட கரமாக சொன்னான். அவன் கூறிய கையோடு என்னிடம் ஒருசதம் கூட இப்போதைக்கு இல்லை நானே காலமைதான் கடன் பட்டனான் என்று ரவியைப் பார்த்து புன்னகைத்தவாறு வீரசிங்கமாமா கூறினார். உடனே ரவி சரிமாமா கூப்பிட்டதற்கு மன்னித்துக்கொள்ளுங்கே என்று கூறிக் கொண்டு வீட்டை நோக்கி விரைந்தான்.

முற்றத்தில் சைக்கிளை விட்டு வீட்டிற்குள் நுழைந்தான் அவனின் பாசத் தங்கையான காயத்திரி தமையனை கண்டவுடன் ஓடி வந்து அண்ணா அம்மா உனக்கு ரீயூசன் காசு வைத்திருக்கிறா என தங்கை சொன்னாள். இப்படி கூறிய தங்கையைப் பார்த்து அம்மா யாரிடமாவது கடன் வாங்கினாரா எனதன் தங்கையிடம் வினாவினான். அந்த கள்ளம் கபடமற்ற அந்த சின்னமழலை அண்ணணைநோக்கி அம்மா தான் போட்டிருந்த தோட்டினை விற்ற காசு தான் இந்த காசு என கவலையோடு கூறினாள். அத்தோடு நின்று விடாது அண்ணா நாங்கள் காலமையில இருந்து எதுவும் சாப்பிடவில்லை அம்மாவும் சாப்பிடவில்லை அப்பாவுக்கு நெஞ்சுக்குள்ளே ஏதோ செய்கிறது எனப் படுத்திருக்கிறார். என தன் அண்ணனிடம் கூறினாள். உடனே தனக்கு ஏன் இவ்வளவு சோதனை என நினைத்து தன்னை மறந்து அழுதான். தாயைப்பாற்பதற்காக அடுக்களைக்கு போவதற்கு எத்தனித்தான்.

செருமிய குரலில் அவனைக் கூப்பிட்ட தந்தை வயசுவந்திட்டுது இனி நீதானே உழைச்சு குடும்பத்தை பார்கவேணும் அதை விட்டுட்டு நீ உன்பாட்டிலை திரிய யார் உழைச்சு போடுறது. என ரவியைப் பார்த்து தந்தை கேட்டார். அது மட்டுமல்லாது நீதானே உனது சகோதரங்களின் குறைநிறை பார்க்கவேண்டியவன் என கோபக்கலந்த வார்த்தையால் ரவியைத் திட்டித் தீர்த்தார். அதற்கு ரவி எதுவித கதையும் பேசாது மௌனமாக அடுக்களைக்குள் காலடி எடுத்து வைத்தான். அங்கே பாத்திரங்கள் எல்லாம் வெறுப்பாத்திரமாக இருந்ததை பார்த்தான். மற்ற மூலையை திருப்பிப் பார்த்தான். அங்கே தாய் சோர்வுற்றபடி உறங்குவதைக் கண்டு கொண்டு பார்த்தான். தாய்க்கு பக்கத்திலே சென்று அம்மா....அம்மா... என அனுங்கிய குரலில் தயவுதாட்சனையும் தாயை அழைத்தான். உறக்கத்திலிருந்து கண்விழித்து பார்த்தாள். மகனைக் கண்ட மாத்திரத்தில் கண்களிலிருந்து கண்ணீா பெருக் கெடுத் தொடியது ரவி தாயின் இரு காதுகளையும் உன்னிப்பாக பார்த்துவிட்டு அம்மா எங்கே? தோட்டைக் காணவில்லை என வியப்பாக கேட்டான். அதற்கு தாய் எதுவுமே சொல்லாது மௌனம் காத்து நின்றாள். தன் தாய் மடிமீது தலைவைத்து படுத்தபடி அம்மா எனக்காக இந்நளவு பாடுபடுவதை உன் பிள்ளை ரவி என்றைக்கும். மறக்கமாட்டேன்.அம்மா எனக் கூறி தாயின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரை தன் கைகளால் துடைத்தான். மகனே உன்னை படிப்பிக்க வேண்டும் என்பது தான் எனது இறுதி ஆசை அதை நிறைவேற்றுவாயா? என தன் மகனைப் பார்த்துக் கேட்டாள். கமலமணி அதற்கு அவன் அம்மா நான் இம்முறை நடக்கும் A/L பரீட்சையில் சிறந்த பெறுபேறை அடைந்து உனக்கு முன்னால் வந்து நிற்பேன்.

என தாய்க்கு சபதம் மட்டுமல்ல ஆறுதலும் கூறினான் அந்த நேரத்தில்லே அவனது பாசஉறவுகளில் ஒன்றான இளைய தங்கை தாயிடம் வந்து அம்மா பசிக்கிறது ஏதாவது பக்கத்துக் கடையில் வாங்கித்தரமாட்டியா? என அழுத வண்ணம் கேட்டாள் கமலமணியும் என்ன செய்வது எனத் தெரியாது ஆனையில் பட்ட துரும்பு போல என்ன செய்வது எனத் தெரியாது அடியற்ற மரம் போல திண்ணையில் உட்கார்ந்தால்.ரவி தாயைப் பார்த்து அப்பா எங்கே? அம்மா எனத் தாயிடம் வினாவினான். கமலமணி மகனின் கேள்விக்கு விடையளிப்பவளாக திண்ணைப்பக்கமாக அப்பா படுத்திருக்கிறார். என மகனுக்கு சொல்லிவிட்டு அடுக்களைப் பக்கமாக போனாள். தந்தையின் அருகில் சென்ற ரவி அப்பா...அப்பா.. எனக் குரல் கொடுத்தான்.

ஆனால் தந்தையின் வாயிலிருந்து எந்த விதமான பதிலுமே வரவில்லை தந்தையை தன் கைகளினால் தட்டினான். எந்தவித பதிலும் இல்லை என்பதை உணர்ந்தான். அந்த நேரத்தில் தந்தையின் வாயில் இருந்து இரத்தம் கசிவதை கண்ட அவன் துடிதுடித்து பேனான். அப்பா! என விறுட்டு அழுதான்.

அம்மா அப்பாவை வந்து பாருங்கே என தாயை அழைத்தான். தாய் வருவதற்குள் தந்தையின் உயிர் அந்த இருண்ட வாழ்க்கையை விட்டு வெளியுலகம் தன்னை நாடியது உறவினர் பாலம் உடைந்துவிட்டது. இனிதான் வாழ்க்கையின் கமலமணி ஊரவர்களை அழைத்தால் எவருமே தக்க சமயத்தில் உதவி செய்ய வரவில்லை யாரவது வாங்கோ! யாரவது வாங்கோ! கடவுளே கெட்ட கடவுளும் இந்த பாவிகுடும்பத்தை கண்திறந்து பார்க்கவில்லை என பரிதவித்து உள்ளக்குமுறலை பலவாறு வெளிப்படுத்தினான். அந்த நேரத்தில் ரவியின் உற்ற நண்பன் கமல் ஒடோடி வந்து தன் நண்பனின் நிலையை அறிந்து அவனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினான். அத்தோடு இறந்து போய்விட்டதை கேள்விப்பட்ட கமலமணியின் தம்பியாகிய வீரசிங்கம் ஒடி வந்தார். உளாரி ஒப்புக்காய் ரவியை கட்டித் தழுவி அழுதார் சில நிமிடங்களின் பின்னர் தன் தங்கையான கமலமணியின் அருகிலே சென்று காதோடு காது வைத்து ஏதோ கேட்டான். இதை அவதானித்த ரவி என்ன மாமா அம்மாவுக்கு சொன்னீங்கள் என தன் மாமனைப் பார்த்து கேட்டான். அதற்கு மாமன் ரவியை ஒரு ஏளன பார்வையாக பார்த்து இதெல்லாம் உனக்கு எங்கே புரியப்போகுது எனச் சொல்லி ரவியை சமாளித்துவிட்டு வெளியே அவசரமாகச் சென்றார். அந்த நேரத்திலே ரவி தாயின் அருகில் சென்று அம்மா மாமா என்ன சொன்னவர் என தாயிடம் வினாவினான்.

அதற்கு கமலமணி எங்களது வீட்டுறுதியை தரட்டுமாம் தான் யாரிடமாவது காசு வாங்கித்தருவராம். என சொல்லி விட்டுச் செல்கிறார். என தன் மகனிடம் கூறினாள். உடனே மகன் அம்மா அப்பாவும் எங்களைவிட்டு போட்டார். இனி எங்களை யார் பார்க்கிறது இருந்தும் இந்தக்காணி தான் அதையும் விற்றால் யாரிடம் தஞ்சம் புகுவது என தாயிடம் கூறினான் அந்த நேரத்தில் ரவியின் மாமா கமலமணி இருந்த பக்கமாக சென்று ஒரு வெற்றுத்தாளில் ஒரு கையொழுத்து போடுமாறு கேட்டான்.உடனே தன் உடன்பிறப்பான அண்ணன் எனக்காக இந்த உதவியினை செய்கிறான். என நம்பிக்கையில் தாள் கையொழுத்து போட்டன். ஆனால் அவனோ இவளிடம் இருக்கின்ற சொத்தை எல்லாம் இந்த தருணத்தில் எடுத்து விடலாம்.

என ஒருதிட்டம் திட்டினான். தாளிலே கையொழுத்து இடுவதை அவதானித்த ரவி தனக்குள்ளே இது தான் பாசஉறவுகளின் விரிசல். அண்ணன் தங்கை பாசம் எல்லாம் வெறும் வேசம் என மாமா மூலம் புரிகிறதே என தன் மனதுக்குள்ளே சொன்னான். அத்தோடு நின்று விடாது தான் தன் தாயை கையொழுத்து போடவேண்டாம். என்று சொன்னான். தன் தந்தையின் இறுதிக் கடன் செய்வதற்கு பணம் இல்லாமல் போகுமே எனவும் சிந்தித்தான். அப்படி சிந்தித்துக் கொண்டிருக்கும் போது கமலமணி உடனே அந்த இடத்தை நோக்கினாள். என்ன ரவி உன் பாட்டிலே யோசிக்கிறாய். என தன் மகனை வினாவினாள். உடனே தாயிடம் அழுதபடி கூறினான். நாங்கள் கஷ்டப்படும் போது உதவவில்லையம்மா இப்போது சொந்தம் என்று வந்தவர்கள் முன்பு எப்போதும் உதவி செய்யவரவில்லையே இப்போது ஊர் புகழுக்காய் மாமா உதவுகிறாரே என தாயிடம் கூறியபடி தந்தைக்கு அருகில் இருந்த தன் நான்கு தங்கைகளையும் தனக்கு உயிர் தந்த தாயை பார்த்தவாறு கண்ணீர் விட்டான். தந்தையின் இறுதிக்கடன் செய்வதற்காக கொள்ளிகட்டையோடு தந்தையின் பூதவுடல் பின்னே வர சுடுகாடு நோக்கி புறப்பட்டான் ரவியும் . தன் மகன் இந்த சிறுவயதிலே தந்தைக்கு நீர்க்கடன் செய்வதை நினைத்து ஓலமிட்டாள். தன் உறவினன் பலமான கணவன் தீயில் சங்கமிப்பதற்கு வீட்டு வாசல் வரை வந்து விடைகொடுத்து அனுப்பினாள். வீதி இருமருங்கிலும் சொந்த உறவுகள். சூழ்ந்து வர ரவியின் தந்தையின் உடல் சுடு காடை அண்மித்தது. அப்போது மீண்டும் தனக்குள்ளேயே மனம் வருந்தினான்.

சுடு காட்டிலே தந்தைக்கு கொள்ளி வைப்பதற்கு முன்னர் கொள்ளிக்குடம் உடைக்க தந்தையை சுத்தி வந்தான். தன் தந்தை இஃது வரை காலமும் தனக்கு தந்தை கைநீட்டி அடித்ததே இல்லை எனச் சொல்லிக் கொண்டு குடத்தை நிலத்தில் போட்டு தந்தையின் தலைமாட்டில் கொள்ளி வைத்தான். சுந்தரத்தின் உடலும் தீயில் சங்கமமாகியது.

சில மாதங்கள் கழிந்தோடின. விதவையான கமலமணியும் கூலி வேலைத் தேடி புறப்பட்டாள். அப்போது ஒரு பிராமண வீட்டில் நெல் குற்றும் தொழிலுக்கு அமர்த்தப்பட்டாள். அல்லும் பகலும் அயராது உழைத்தாள். ரவியும் தாயும் ஊதியத்தை கொண்டு தன் கல்வியை இடைவிடாது தொடர்ந்தான். அவனது நான்கு தங்கைமார்களும் கல்வியில் ஆர்வம் கொண்டவர்களாக இருந்தார்கள்.

கமலமணி வேலை செய்து விட்டு வீட்டுக்கு வந்த பிற்பாடுதான் பிள்ளைகளுக்கு உணவு சமைப்பதை அன்றாட கருமமாக செய்து வந்தாள். நாளுக்கு நாள் A/L பரீட்சையும் நெருங்கியது அவன் புத்தகமும் கையுமக தினமும் இருந்தான். அவனுக்கு ஒளி கொடுக்க எந்நேரமும் தயராக குப்பிவிளக்கும் இருந்தது. கமலமணி தன் மகன் படிப்பதைபார்த்து தனக்குள்ளேயே எதிர்பார்ப்போடு என்னைப்போல என் பிள்ளைகளும் கூலி வேலை செய்யக் கூடாது அவர்கள் படித்து டாக்குத்தராகவும், எஞ்சினியராகவும், வரவேண்டும் அவள் கற்பனை கதவுகளைதிறந்து பார்ப்பவளாய் இருந்தாள். ஊன் உறக்கமில்லாமல் பிள்ளைகள் படிக்கும்வரை விழித்திருப்பாள்.

சில வாரங்கள் உருண்டோடின யு.்.டு பரீட்சைக்கு தோற்றுவதற்காக ரவியும் தன்னை திடப்படுத்திக் கொண்டான். கொண்டவன் வறுமையை பொருட்படுத்தாது A/L பரீட்சைக்கு தோற்றினான். தோற்றிய சில மாதங்களின் பின்னர் ஒரு புத்தகசாலையில் விற்பனையாளராக சேர்ந்தான். இதனால் கமலமணிக்கு மிகுந்த சந்தோஷம் ஆனாலும் அந்த நேரத்தில் தான் கமலமணிக்கு கடும் உழைப்பின் காரணமாக உடல் பலவீனம் அடைந்தது. தன் தாயின் நிலமையினால் மனமுடைந்து பேனான் ரவியும் தாயின் நிலமைகாரணமாக செய்து வந்த தொழிலையும் கைவிட்டான். அதுமாத்திரமல்லாது ரவி தன் தாயை வைத்தியசாலைக்கு அழைத்துச் சொன்றான்.அங்கே பரிசோதித்த வைத்தியர் ரவியின் பரிதாபகாரமா பார்த்தார். என்ன டெக்டர் சொல்லுங்கோ அம்மாவுக்கு எப்படி இருக்கு சுகமோ எனக் கேட்டான். அதற்கு வைத்தியரால் எதுவுமே சொல்லமுடியாமல் வெளியிலே வாருங்கோ என ரவியைக் கூட்டிக் கொண்டு சென்றார். உங்களுடைய அம்மாவுக்கு..... என டொக்கர் எதுவிமே சொல்லமுடியாமல் நின்றார். ரவி உடனே என்ன டொக்கர் அம்மாவுக்கு என்ன நடந்தது சொல்லுங்கோ என பதற்றத்துடன் கேட்டான். உடனே ரவியைப் பார்த்தவர் ஒன்றுமில்லை உங்களுடைய அம்மாவுக்கு மார்பகப் புற்றுநோய் இருக்கிறது. இதனை நிவர்த்தி செய்வதாக இருந்தால். ஒருலட்சம் பணம் தேவை எனக் கூறினார். அந்தமாத்திரத்தில் அதிர்ந்து மௌனமாய் அருகிலிருந்த கதிரையில் ரவியும் இருந்தான்.

நிமிடங்களின் பின்பு அந்த வழியாக மீண்டும் டொக்ரர் வந்து ஒருமணித்தியாலத்தில் காசு கட்டினாத்தான் ஓப்பிரேஷன் செய்யலாம். எனக் கூறிக் கொண்டு பக்கத்து அறைக்கு சென்றார்.அதன் பின்னர் ரவி தனக்குள்ளேயே இவ்வளவு பணத்திற்கு எங்கே போவேன்.

என வீறுட்டுஅழுதான்.அந்த நேரத்தில் அவனது நான்கு தங்கைகளும் அவனோடு அருகிலிருந்து தாயின் நினைவுகளை சுமந்தவாறு கண்ணீர் விட்டார்கள். நான் எங்கே சென்று பணம் வாங்குவது என தன் மனதிடம் வினாவினான். அப்போது அவனுக்கு அந்தநேரத்தில் மாமனிடம் சென்று பணம் கேட்டால் என்ன என எண்ணிக்கொண்டு தன் தாய் மாமனிடம் ஓடோடிச் சென்றான். அங்கே மாமன் வீட்டில் இருக்கவில்லை ஆகையால் பக்கத்து வீட்டுக்காரரிடம் விசாரித்தான். அவர்கள் இரண்டு வாரத்திற்கு முன்னர் வெளிநாடு சென்று விட்டார்கள்.

என பக்கத்து வீட்டுக்காரரிடம் இருந்து பதில் வந்தது. மீண்டும் களைக்காமல் தன் உற்றநண்பனான கமலைத் தேடி ஓடோடிச் செல்கின்றான். ஆனாலும் அவனுக்கு கமலின் வீட்டுமுகவரி தெரியாது. அப்படியே நடு வீதியில் நின்று கடவுளே! இன்னுமா சோதனை நீ இந்நஏழைகளிடம் இரக்கம் கொள்ள மாட்டியோ என் அம்மா உயிருக்கு பேராடுகிறார் இந்த நேரத்தில் உதவி செய்ய மாட்டியா என இறைவனிடம் கருணைஉள்ளத்தோடு வேண்டிநின்றான். பின்னர் நடையும் ஓட்டமுமாக சென்ற அவனுக்கு கால்கள் கடுக்கத்தொடங்கின என் அம்மா.. என் அம்மா.. என்று கதறியபடி மீண்டும் வைத்தியசாலையை சென்றடைந்தான். அங்கே எதிர்பாராதவிதமாக அவனது வகுப்பாசிரியர். தீடீரென வெளியே நோயாளர் அறைக்கு முன்னாலே சந்திக்கநேரிட்டது. என்ன ரவி இந்தப் பக்கம் என ஒரு குரல் அவனை நோக்கி கேட்டது திரும்பி பார்த்தான் அவனது வகுப்பாசிரியர் நீ A/L பரீட்சையில் மூன்று பாடமும் 3A எடுத்து இருக்கிறாய் என புன்னகை கலந்தபேச்சோடு சொல்லி முடித்தார். உடனே ரவியின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாக பெருக்கெடுத்தோடியது. அதனைப் பார்த்த ஆசிரியர் என்ன ரவிநடந்தது சொல்லுஎன பரிதாபத்தோடு ரவியைப்பார்த்து வகுப்பாசிரியர் கேட்டார். அதற்கு ரவி வகுப்பாசிரியரை நோக்கி எங்களுக்கு துணை என்று எங்கள் அம்மா இருந்தவர் அவரும் உயிருக்கு போராடிக்கொண்டிருக்கிறார். ஓப்பிரேசன் செய்ய ஒருலட்சம் பணம் தேவை என டொக்ரர் சொன்னவர். என தன் ஆசிரியருக்கு கூறினான்.

உறவினர்கள் நண்பர்கள் எங்கு போயும் பணம் கிடைக்கவில்லை எனச் சொல்லி அழுதான். ரவியின் மனதை திடப்படுத்தி ஆசிரியர் நான் காசு தந்து உதவுவதாக ரவியிடம் கூறினார்.

உடனே என்ன செய்வது என்று தொரியாமல் நேரிலேவந்து உதவி செய்கின்ற கடவுளே! என ஆசிரியரின் காலில் வீழ்ந்து தொட்டுக்கும்பிட்டு நான் கும்பிட்ட கடவுள் என்னைக் கைவிடவில்லை. என வகுப்பாசிரியரைக் கூட்டிக்கொண்டு தாய் படுத்திருக்கும் அவசரசிகிச்சை அறயை நோக்கி விரைந்தான். அங்கே உள்ள அந்த கண்ணாடிக்கதவை தள்ளிக்கொண்டு ரீச்சரும் ரவியுமாக உள்ள நுழைந்தனர்.

ரவியின் தாய் படுத்திருப்பதை பார்த்த வகுப்பாசிரியர் கட்டிலுக்கு அருகாமையில் சென்று ரவி தாயை நோக்கி அம்மா யார்வந்திருக்கிறது என்று பாரம்மா. எனத் தாயிடம் பரிதாபகரமாக அழுதவண்ணம் சென்னான். ஆனாலும் கமலமணியின் கண்கள் அசையவில்லை தாயை நோக்கி அம்மா நீ தோடு விற்று படிப்பித்ததிற்கும் நீ கூலி வேலை செய்து கஷ்டப்பட்டு எங்களைப்படிப்பித்ததிற்கும். பலன் கிடைத்து விட்டது இனி நீங்கள் கவலைப்படதேவையில்லை அம்மா நான் A/L பரீட்சை பாஸ் பண்ணி விட்டேன். என தாயின் காதோடு தன் வாயைவைத்து அழுதான். சொன்ன மாத்திரம் கமலமணியின் இமை மெதுவாக திறந்தாள். முன்னே தன் ஐந்து பிள்ளைகளையும் கூடவே ஆசிரியரும் நிற்பதைக் கண்விழித்து பார்த்தாள். ஆனால் கமலமணியால் எதுவும் பேசமுடியவில்லை. கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது அந்த நேரத்தில் கமலமணியின் இளையமகள் அம்மா இனி நீ கவலைப்படவேண்டாம். அம்மா எல்லாத்திற்கும் அண்ணா இருக்கிறார். என அழுதவண்ணம் தாயிடம் காயத்திரி கூறினாள். கமலமணி இருமல் நின்றுவிடாது இருமியது மூச்சு திணறியது. அந்த நோரத்தில் ரவி ஜயோ! டொக்ரர் என ரவி சத்தமிட்டான். டொக்ரர் வருவதற்கிடையில். கமலமணியின் உயிர் அவளின் பெற்றபிள்ளைகளை தவிக்கவிட்டு தன் கணவன் சுந்தரத்தை நாடி சுதந்திரக்காற்றாக பறந்து போனாள். ஆம் இனி அந்த நான்கு சகோதரிகளும் சுமைதாங்கியாக ரவி இருக்கின்றான்.

த. தவனேசன்
யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்.

# பெண்ணென்று பிறந்து விட்டால்....?

கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி, பருத்தித்துறை...." என்று கத்திக் கொண்டு கொண்டக்டர் வேகமாக ஓடிவரும் சௌதாவைப் பார்த்து சிரித்துவிட்டு "வாங்கோ அக்கா உங்களைத்தான் பார்த்து நிற்கின்றோம். ஏறுங்கோ"என்று வழமையாக அந்த பஸ்சில் ஏறிச்செல்லும் சிநேகிதத்தில் கூறுகின்றான். "தம்பி எடுக்க நேரமாகுமோ" இல்லை அக்கா இப்ப எடுக்கப்போறம். "ஏதாவது வாங்க இருந்தால் வாங்கிக் கொண்டு ஓடிவாங்கோ" கெதியாய் வாறன் தம்பி" என்று கூறியபடி ஓடிச்சென்று கடையில் சோடாவும் பிஸ்கட்டும் வாங்கிக்கொண்டு வருகின்றாள். முன்னைவிட வானில் அதிகசனம் நிறைந்து விட்டது. ஏறி அங்குமிங்கும் பார்க்கிறாள். சீற்கிடைக்கவில்லை பறவாய்யில்லை நின்றாவது வீட்டுக்கு வேளைக்குப் போனால் சரி என எண்ணியபடி வானில் யன்னல் வளியாக குனிந்து பார்க்கின்றாள். கடைகள் சில பூட்டி இருந்தன சில ஒற்றைக்காலில் தொங்கிக்கொண்டு நின்றன சிலவற்றில் அவசர அவசரமாக கடை பூட்டுவதற்கான அயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன அவசர அவசரமாக அந்தக் தத்திக்குகளிலிருந்தும் வேலை முடித்து வந்தவர்கள் தத்தமது இடங்களுக்குச் சொல்லும் வாகனங்களைத் தேடிக் கொண்டிருக் கின்றார்கள்.

அவர்களைப் பார்க்கும் போது நேரம் போவதால் ஏற்பட்ட சினம் தெரிகிறது சௌதா மணிக்கூட்டைத்திருப்பி நேரம் பார்க்கிறாள். 4.15, என் இந்தச் சனியன்பிடிப்பான்கள் வானை எடுக்கான்களாம் அவன் விசிலூதிவிட்டானென்றால்சரி! என்று யாரே முணுமுணுப்பது கேட்கிறது. அப்பொழுது றைவர் வந்து வானை எடுக்கிறான். வானுக்கு முன்னால் நின்றவர்கள் எல்லாம் ஓடி வந்து ஏறி வான் எல்லோரையும் உள்வாங்கிக் கொண்டு ஊர்ந்து செல்கிறது.கடவுளே கெதியாப் போகவேணும் விசிலூதமுன்னம் வீட்ட போய்ச் சேரவேணும் என்று வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிக்கொள்கிறாள் சௌதா. காலையில் சமைப்பதற்காக வேளைக்கு எழுந்தபோது குழந்தையைத் தொட்டு பார்க்க லேசான காய்ச்சல் அடித்தது வேலைக்குப் போகாமல் நில் என்று சொன்ன கணவனுக்கு முக்கியமான பைல் ஒன்றைக் கொண்டு வந்து விட்டேன் கொண்டு போகவேண்டும் லேசாய்த்தான் மேல்சுடுகுது ஏலுமானவரை சோட்லீவு போட்டுவிட்டு வரப்பார்க்கிறன்.

என்று சொல்லிவிட்டு தாயரிடம் குழந்தைக்காகிய மருந்தை யெல்லாம் எடுத்துக் கொடுத்துவிட்டு 7.30 மணிக்கு பஸ் எறியவள் அலுவலகத்தில் வந்து பைலைக் கொடுத்துவிட்டு "சேர் நான் இண்டைக்கு சோட்லீவில் போகப்போகிறேன். என்ன கதைக்கிறீர் இன்று இவ்வளவு வேலையும் முடிக்கவேணும் உம்மட வேலையை நானே செய்கிறது" என்று எரிஞ்சு விழ வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு "சேர் குழந்தைக்கு வருத்தம் அதனால் தான் போகப்போகிறேன;" ஒரு நாளைக்கு பிள்ளைக்கு வருத்தம் ஒரு நாளைக்கு புருசனுக்கு வருத்தம் இப்படி வருஷம் முழுக்க லீவு எடுங்கோ சரி இந்தப் பைலில் உள்ளதைச் சரிபார்த்து விட்டு போம், என்று ஒரு பெரிய பைல் கட்டைத்துக்கிப் போட்டார். அதை எடுத்துக் கொண்டு போய் குனிந்த தலை நிமிராமல் ரீகுடிக்போகாமல் லஞ் எடுக்கப் போகாமல் மணிக்கூட்டைப் பார்ப்பதும் பைலைப் பார்ப்பதுமாக இருந்தவளுக்கு 2.30 மணிக்கு பின் நம்பிக்கை இழந்து விட்டது ஆத்திரம் ஒருபக்கம் பசி ஒருபக்கம் தொடர்ந்து குனிந்து பார்த்ததால் ஏற்பட்ட வலி ஒருபக்கமாக அழுகை அழுகையாக வந்தது. கந்தோரில் வந்து கதைத்தவர்களுக்கு கூடப் பதில் சொல்லாது ஏலுமான அளவு வேலையை முடித்து விட்டு பார்க்க 3.45 மணியாகி விட்டது பார்த்து முடிந்த பையிலைக் கொண்டு போய் கொடுத்து சரி பார்த்த பின் "சரி போகப் போறீரா போட்டு வாரும;" என்று சொன்னது தான் கேட்டது என்னமாதிரி பாக் எடுத்தாள் செருப்பு போட்டாள் என்று தெரியாமல் ஓடியும் நடந்தும் வந்தாள். அதையெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தவளை இருபாலை வந்து விட்டது ஒருக்கஇறங்கி ஏறுங்கோ வாங்கோ இறங்கக் கூடியவையெல்லாம் கெதியா இறங்குங்கோ நேரம் போட்டுது? என்ற கொண்டக்ரரின் குரல் நினைவிழக்கச் செய்தது. "அவங்கள் இறங்கி விடாமல் விட்டாலும் இவங்கள் இறங்கி விட்டுத்தான் மற்றவேலை பார்ப்பாங்கள்" என்று சீற்றிலிருந்த சில சிறிசுகள் பேசிக் கொண்டு அவசரஅவசரமாக ஜலன்ரிக்கட்டையும் எடுத்துக் கொண்டு ஒட அவளும் அவர்களுடன் சென்றாள். எல்லோரும் ஒவ்வொருவராக பார்த்து முடிய முன்னர் வான் செக் பண்ணி முடிந்தது போய்விட அங்கு நின்று "வாங்கோ வேளைக்கு ஊதப்போறான் ஒடி வாங்கோ" என்று கொண்டக்ரர் கத்த எல்லோரும் ஒடிப்போய் ஏற மீண்டும் வான் வேகமாக ஓடுகிறது. கடவுளே இப்பவே 5.00 மணியாச்சு 5.30க்கு வல்லையில மறிச்சுப் போடுவான் அப்படி மறிச்சால் 7.00மணிக்குத் தான் வீட்டுக்குப் போகவேணும் அவரும் வந்து காவல் நிற்கப்போறார். குழந்தை என்ன மாதிரியோ தெரியாது என்று தவித்துக் கொண்டு இருக்கும் அவளின் மனதிற்கேற்ப வானும் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

"அக்கா காசைத் தாங்கோ" என்றவனிடம் காசைக் கொடுத்துவிட்டு அங்குமிங்கும் பார்க்கிறாள் அருகில் சொல்லும் வாகனங்களும் அதே வேகத்தில் ஒன்றையொன்று முந்துமாய்போல் ஒடிக் கொண்டிருக்கிறது. அவளது மனமோ அவற்றையெல்லாம் தாண்டிக் குழந்தையிடம் ஒடிக்கொண்டிருக்கின்றது.

திடீரென எல்லோரும் எட்டியெட்டிப் பார்த்து ஏதோ கதைக்கிறார்கள். என்னவாம் ஊதிப்போட்டான் அங்க வாகனங்கள் எல்லாம் நிக்குது. ஒன்றையொன்று விட்டுவிட்டு ஒடி வந்த வாகனமெல்லாம் ஓரமாக ஒய்ந்து போய் நின்றது "சரியே இனி ஏழுமணிக்குத்தான் வீட்ட அது மட்டும் இதில நிண்டு காயவேணும்;" "மழை இருட்டு வரப்போகுது இந்த இருவழியால் என்னெண்டு வீட்ட போறது" என்று அவரவர் தங்கட பிரச்சனைகளைச் சொல்லி புலம்புகிறார்கள் இவ்வளவு நேரமும் அடைபட்டு வந்த சிலர் ஆறுதலாகவெளியால நிப்பம் என்று இறங்குகின்றார்கள் அதில் இருந்த சீற் ஒன்றில் சௌதா சென்று இருக்கின்றாள் தலையிடி தாங்காது பாக்கைத் திறந்து விக்ஸ் எடுத்து தடவுகிறாள் பாக்குக்குள் காலையில் கொண்டு போன சாப்பாடு அப்படியே இருக்கிறது. இப்படி அவசரப்பட்டு சாப்பிடாமல் வேலை செய்து வந்தும் அநியாயமாய் ஒரு மணிநேரம் நிற்கும் நிலையையும் தனது வீட்டு நிலையையும் நினைத்தவளுக்கு அழுகைய அழுகையாக வந்தது அதை அடக்கி கொண்டு அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருக்கிறாள் பஸ்சுக்குள் இருக்கும் ஒவ்வெரு குழந்தையும் அழ தன்னையும் அறியாமல் அவாகளை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டு இருக்கிறாள்.

மெல்ல மெல்லவாக இருள் ஒளியை விழுங்கிக் கொண்டிருக்க அவளின் நம்பிக்கையை பயம் மூடிக் கொண்டிருக்கிறது. மீண்டும் மனித இரைச்சல் போகட்டம் ஏறுங்கோ ஏறுங்கோ எல்லோரும் ஒடி வந்து பஸ்சில் ஏறிக் கொள்ள அவை ஒவ்வொன்றாக நகரத் தொடங்குகிறது. மீண்டும் அதே வேகம் புறாப்பொறுக்கியிலிருந்து இறங்குபவர்களை இறக்கி விட்டுக் கொண்டு ஒவ்வொன்றாக வாகனங்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன நாவலர் மடத்தடியில் இறங்குபவர்கள் இறங்க சௌதா எழுந்து விட்டாள். "தம்பி பெற்றோள் சைற்றடியில் இறக்கி விடுங்கோ". குனிந்து வெளியில் பார்க்கிறாள். இருண்டு விட்டது எல்லா வீடுகளிலும் லைற் எரிகிறது இனம் புரியாத ஒரு பயம் அவளுக்கு தானாக வருகிறது "வாங்கோ அக்கா பெற்றோல் சைற;" அவளும் இறங்க இன்னுமொரு பெண்ணும் இறங்குகிறாள். அந்தப் பெண் விக்கினேஸ்வரப் பள்ளிக்கூடத்தடியில் இருப்பவள். அந்தப் பெண்ணைப் பார்த்தவளுக்கு ஒரளவு தென்பு வந்து விட்டது

தனது கணவன் எங்கேயாவது நிற்கலாம் என்ற நப்பாசையில் நடந்தபடி கண்களால் குழாவுகிறாள்.எங்கும் இருளே தவிர மனித நடமாட்டமே தெரியவில்லை. வீடுகளின் யன்னல்களால் கசிந்த வெளிச்சம் றோட்டை ஓரளவு இருளிடமிருந்து பாதுகாக்கிறது சோலையை இழுத்து கழுத்தைப் போர்த்தபடி குழந்தைகளுக்காக வாங்கிய சோடா,பிஸ்கட், உள்ள பாக்கை இறுக்கப் பிடித்தபடி கான்பாக்கையும் கவனமாகக் கொண்டு தன்னுடன் இறங்கிய பெண்ணுக்கு முன் வேகமாக நடக்கிறாள் கால்களுக்கு எவ்வாறு தென்புவந்ததோ தெரியாது அங்குமிங்கும் பார்த்தபடி தலையிடியோ, மனவலியோ, பசியோ, எதுவும் தெரியவில்லை அதோ வீடு வந்துவிட்டது. லைற் எரியுது கேற்றுக்குள் நிற்கிறாள். தூரவரும்போதே முகத்தை உற்றுப் பார்க்கிறாள். கோவமாக நிற்கிறார். கடவுளே! குழந்தைகளுக்கு காய்ச்சல் கூடவோ? தாய்மனம் பதறுகின்றது. கேற்றைத்திறக்க கையை வைக்கிறாள். நில்! "என்ன செய்தாய் இவ்வளவு நேரமும; " கையில் வைத்திருந்த பாக்கைப் பறித்து எறிகிறான். போத்தல் மூடி கழன்று ஸ்..................... என்ற சத்தத்துடன் பொங்கி வழிந்து கொண்டிருக்கின்றது. சோடா.

**கோகிலா.எஸ்**
**(கலைத்துறை யாழ்பாணபல்கலைக் கழகம்)**
**யாழ்ப்பாணம்)**

நிலா மலர வாழ்த்துகிறோம்...



நிலா வளர வாழ்த்துகிறோம்...

# ஒளியருவி வீடியோ விஷன்

## டிஜிற்றல் வீடியோ அன் போட்டோ



சாமியன் அரசடி கரவெட்டி

T.P 0212268132

நிலா நிலைக்க வாழ்த்துகிறோம்...

# ஸ்ரீசாயி ஸ்ரூடியோ





**உள் புற, வெளிபுற, படபிடிப்பு வீடியோ படபடிபபு, கணணி முறையில் வீடியோ படிபிடிப்பு, பழைய படங்களை சீரமைத்தல், கறுப்பு வெள்ளை படங்களை கலர்படமாக மாற்றுதல், டிஜிரல் முறையில் அல்பம் தயாரித்தல் போன்ற சேவைகளை பெற நாட வேண்டிய இடம்.**

நவிண்டில்வீதி

கொற்றாவத்தை

# மாணவர்களின் கல்வியில் ஆசிரியரின் பங்கு

"செத்தும் கொடுத்த சீதக்காதி" என்பது பழமொழி இவ்வாறே ஆசிரியரும் மாணவனின் அறிவுப்பசியை தீர்ப்பவராக இருக்க வேண்டும். மாணவர்கள் விரைந்தோடும் நதியை ஒத்தவர்கள் அவர்களுக்கு சரியான பாதையை காட்டுதல் ஆசிரியரின் தலையாய பொறுப்பாகும் விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பர். அவர்களின் அறிவு திறன், மனப்பாங்கு, எழுச்சி என்பவற்றை வளர்ப்பவராக ஆசிரியர் அமைய வேண்டும்.

எனவே மாணவர்களுக்கு ஆசிரியர் செயற்பாட்டு ரீதியான கல்வியைப் புகட்ட வேண்டும். ஆரம்ப வகுப்புகளில் மொழித்திறன்களை கற்பிக்கும் போது அதிகளவு கட்புல செவிப்புல சாதனங்களை பயன்படுத்த வேண்டும். பொருத்தமான துணைச்சாதனங்கள் பொருத்தமான சந்தர்ப்பத்தில் பயன்படுத்த தெரிந்திருக்க வேண்டும். இதற்கு பாடத் திட்டமிடல் அவசியமானதாகும் உதாரணம் படம் பார்த்துக் கதை கூறல் என்பவற்றை கூறலாம். மற்றும் வானொலி ஒலிப்பதிவு நாடா என்பன செவிப்புல சாதனங்களாகும்.

மற்றும் பிள்ளையின் இயல்பான வளர்ச்சிக்கு வாய்ப்பான சூழலை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். பிள்ளையின் உணர்ச்சிகளையும், எண்ணங்களையும், கருத்துக்களையும் வெளிப்படுத்த பூரண சுதந்திரம் அளிக்க வேண்டும். பிள்ளைகள் நன்றாக செவிமடுப்பதற்கும், பேசுவதற்கும், கருத்துக்களை பரிமாறுவதற்கும், ஆடல் பாடல் நிகழ்த்துவதற்கும், வரைவதற்கும் ஆக்குவதற்கும், எழுதுவதற்கும், நிறைய சந்தர்ப்பங்கள் வழங்கி ஊக்கிவிக்க வேண்டும்.

கல்வி கற்பிக்கும் போது மாணவர் மையக் கல்வியாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மானவனது தனியாள் வேறுபாட்டிற்கு ஏற்ப கல்வி புகட்ட வேண்டும் 6-11 வயதுக்குட்பட்ட பருவம் பிள்ளைப்பருவம் ஆகும். இந்தப் பருவத்தில் மாணவர்களின் உடல் வளர்ச்சி, சமூகமனஎழுச்சி , மொழிவளர்ச்சி, விளையாட்டுத்திறன் வளர்ச்சி, அறநெறி வளர்ச்சி என்பன நிகழும். ஆசிரியர் தகவல் தொழிலுட்ப அறிவுடையவராக இருக்க வேண்டும் மாணவர்கள் குழுவாக செயற்பாட்டில் ஈடுபட வேண்டும் தேவையான இடங்களில் ஆலோசனை வழங்க வேண்டும். இடையிடையே வினாக்களை கேட்டு முழு நேரமும் பிள்ளைகளுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

மாணவர்கள் ஆக்கபூர்வமாக சிந்திக்க மகிழ்ச்சியாக இருப்பதற்கு அவர்களை விளையாட்டில் ஈடுபடுத்த வேண்டும் உதாரணமாக பாட்டியின் அடிச்சுவடுகள், வெள்ளாட்டுக்கு புகழிடம் அளித்தல் போன்ற விளையாட்டுக்களை விளையாட விடுதல் மேலும் மனவெழுச்சி பல்வேறு முகக் குறிகளை கரும்பலகையில் கீறி மாணவர்களிடம் கேட்டு அவர்களின் உணர்வுகளை அறிந்து கொள்ள வேண்டும்.கதாபாத்திரம் ஏற்று நடிக்க விடுதல் நூலகங்களுக்கு கூட்டிச் செல்லல் கல்விச் சுற்றுலாவிற்கு கூட்டிச் செல்லல் மாணவமன்றத்தில் பங்கேற்கச் செய்தல் பல தொழிற்கல்வியை வழங்குதல் சாரணர் இயக்கம் போன்றவற்றில் வழிகாட்டுதல் பொது நலத்திட்ட உதவிகளை செய்யும் வகையில் வழிகாட்டுதல்.

இவ்வாறாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டினால் மாணவர்கள் பிற்காலத்தில் ஒழுக்கமுடைய சான்றோராய், மேதைகளாய்,வல்லுணர்களாய் விளங்குவார்கள். “எழுத்தறித்தவன் இறையவன்” என்பர் எனவே ஆசிரியர்கள் குற்றமற்றவாயும் மாணவர்களின் குற்றங்களைக் களைபவராயும் இருத்தல் வேண்டும்.

*வேலுப்பிள்ளை குமாரசாமி*
*இளைப்பாறிய அதிபர்*
*க/அ.த.க பாடசாலை பொரனை*
*கண்டி*

# நவீன அறிவியலும் ஒலி நடாவின் புதுமை

கல்லையும் கல்லையும் உராவிய அன்றைய ரெபோ மனிதன் தீச்சுவாலை எரிவதனை கண்டான். அன்று முதல் இற்றைக்கு 21 நூற்றாண்டு வரை வளர்ந்து வருவதில் அறிவியல் பெரிதும் பங்கேற்கிறது "ஆகாயத்தில் கோட்டை கட்டாதே என்பது பழ மொழி ஆனால் ஆகாயத்தில் கோட்டை கட்டலாம் என்பது"

ஆம் இவ் கூற்றிற்கு அமைய அறிவியலின் புதுமைகள் எண்ணற்றவை அந்த ஒலிநடாவின் புதுமை பற்றி நோக்குகையில் "புதுமை நாம் விரும்பும் கலை இலக்கிய நிகழ்வுகளையும் பண்பாட்டு கோலங்களையும் இலகுவாக கேட்டு மகிழவும் அவற்றை பேணி வைத்து தேவைபடும் போது உபயோகித்து கொள்ளவும் உதவும் ஒரு செவிப்புல சாதனம் தான் ஒலி நடாவின் பதி கருவி" ஆகும் (Audio Aid)

இக் கருவியை அண்மை கால புதுமை கண்டு பிடிப்புகளில் ஒன்றாக இன்று பட்டி தொட்டிகள் எல்லாம் சாதாரணமாக காணக்கூடியதாக உள்ளது. கடந்த 40-50 ஆண்டுகளில் தான் அதன் உபயோகம் வெளிச்ச விடிவிற்கு வந்தது

அதாவது டென் மார்க்கை சேர்ந்த பொறியிலாளர் "வால்டிமேர் போல்சன்" என்ற அறிவியல் நிபுணர் 1898ல் இது பற்றிய கருத்தை முன் வைத்த போது ஓர் ஒலி நடா கருவியையும் தாயாரித்திருந்தார் அவர் அறிமுகம் செய்த நாடா இன்று நாம் காணும் ஒலி நாடா போல் அல்லாது சற்று கரடு முரடாக இருந்தது அதாவது இரண்டு வட்ட சுருள்களில் (Spool) நகரும் ஓர் உருக்கு முலாம் பூசப்பட்ட கம்பியாக இருந்தது இந்தக் கம்பிக்கு மின் காந்தம் ஊட்டபட்டு "மைக்ரோபன்" என்று கூறும் ஒலி வாங்கியுடன் இணைக்கப்பட்டது. அவ் ஒலி வாங்கி தான் ஏற்று கொண்ட ஒலி பதிவுக்கு ஏற்ப அக் கம்பி மின் காந்தத்தோடு விரைவாக இயங்கியது.

1940ம் ஆண்டு வரை சற்று இடக்கு முடக்காக உலகிற்கு அறிமுகம் இல்லாமல் இருந்தது குறிப்படத்தக்கது இவ்வாண்டில் ஜேர்மன் நாட்டு 2 நிறுவனமான "AEG" டெலிவங்கன்" "IG பார்பென்" என்பன இணைந்து நவீன பிளாஸ்ரிக் நாடா கண்டு பிடிக்கப்பட்டது இந்த நாடாவில் காந்த இரும்பு "டைபோர்சைற்" துகள்கள் ஊட்டப் பெற்றன.இது கூட அன்று சற்று கரடுமுரடாகத்தான் இருந்தது ஆனால் 1960க்கு பின் இது கையடக்க அளவில் வந்த பின்னர் தான் பிரபல்யம் வலுவடைந்து பாவனைக்கு வந்தது இந்த ஒலி பேழையின் பொறி முறை நுட்பத்தை இங்கு அதிகம் சொல்ல முடியாவிட்டாலும் அதன் இயங்கும் முறையையும் செயற்பாட்டு முறையையும் சுருக்கமாக கூறலாம் அதாவது ஒலி பதிவாகும் நாடா ஒரு பிளாஸ்ரிக் சாதனம் அதில் ஒருபுறம் காந்தம் ஊட்டப்பெற்ற இரும்பு அல்லது குரோமியம் ஒட்சைட்டு மூலகத்தை அடித்தளமாக கொண்டிருக்கும் இக் காந்த மூலகப் பொருளே ஒலியை ஒரு குறிப்பிட்ட காலம் வரை தேக்கி வைத்திருக்க உதவுகிறது.

இதில் ஒலி எவ்வாறு பதிவுசெய்கிறது என்பது முக்கியம் ஒலியை அது தரும் தகவலை மின்சாரமாக மாற்றுவதே அதன் முதல் முதன் படியாகும் இது "மைக்ரோ போன்" எனப்படும் ஒலி வாங்கி நிகழ்த்தப் பெறும் அதாவது பேசுபவர் அல்லது பாடுபவர் முதலில் ஒலி வாங்கிக்கு முன்னால் தனது ஒலியை தர அவ் ஒலியின் அலைகள் மின்சாரமாக மாற்றப்படும் இடர் மின்சாரம் வலுவில் குறைவுடையதாக இருப்பதால் அதனை ஒலி பெருக்கி மூலம் பொருத்தப்படும். அப்போது மின்சாரம் பதிவு கருவியில் இருக்கும் கெட் (Head point) முனைக்கும் செலுத்தப்படும். இப்பதிவு முறை ஒரு மின் காந்தமாகும். இது பதிவாகும் ஒலித்துகள்களை நாடாவில் விதவிதமான கோலத்தில் பதிவு செய்ய உதவுவதோடு அதனை சேமித்து வைக்கவும் உதவும். அதே வேளையில் ஒலிபதிவாகும் நாடாவை பதிவு முறையை நோக்கி இயங்க மோட்டார் மின் வலு உதவும்.

ஒலி நாடாவில் ஒலி சேமிக்கப்படுவதானது சேமிக்கப்படும் ஒலி தேவைப்படும் ஒலி தேவைப்படும். போது மீளவும் உபயோகிக்கலாம். அதாவது பொதுவாக நியமான நாடா அளவு ஒன்றிருக்கிறது அதாவது பொதுவாக ஒரு நாடா 0.25 அல்லவா? 0.04 மில்லி மீற்றர் கனத்திலும் 06 மி.மீற்றர் அகலத்திலும் இருக்கும் இந்த நாடா பெரும்பாலும் விநாடிக்கு 1.9-9.5 CM வேகத்தில் இயங்கும். தொழில் ரீதியாக ஒலிபதிவு நாடா கருவி விநாடிக்கு 5CM வேகத்தை கொண்டிருக்கும்.

ஆகவே இவ்வாறு நாம் அன்றாடம் பாவிக்கும் ஒலிப்பேளையின் பொறிமுறை பற்றி அறிவது மட்டுமல்ல அறிவியல் ரீதியாக மேன்மேலும் வளரும் என்பதில் எவ்வித ஐயமில்லை. இது சத்தியம் நிச்சயம்!

*உ.றமணன்*
*யா/விக்னேஸ்வரா கல்லூரி*

நிலா வளர வாழ்த்துகிறோம்...

**தாசன் வீடியோ சென்ரர்**

**AUDIO, VIDEO, DVD SALES**
**WISHTO VCD, DVD & CD WRITING**
**DIGITAL PHOTO COPY 7 AND PRINTING**
**MOBILE PHONE PARTS SALES**



மேற்படி சேவைகளை
பெற்றுக் கொள்ள
பருத்திநகரில் நாட வேண்டிய
நிறுவனம் தாசன் வீடியோ
சென்ரர்

1ம் கட்டை
பிரதான வீதி,
பருத்தித்துறை.

# அண்மையில் இரண்டு ஒஸ்கார் விருதுபெற்ற இசையுலக ஆட்ட நாயகன் ஏ.ஆர் ராஹ்மான்



இன்று இரண்டு ஒஸ்கார் விருதுகளைப் பெற்று உலக அரங்கில் தமிழிரின் தரத்தை உயர்த்தி இருக்கின்றார் இசை மேதை ஏ.ஆர். ராஹ்மான். இவர் எந்த ஒரு தமிழ் இசையமைப்பாளரும் செய்யாத செய்யமுடியாத ஒரு சாதனையை இப் புவியில் நிலைநாட்டியிருக்கின்றார். உலக வல்லரசான அமெரிக்க மண்ணில் தமிழனினதும், தமிழினதும் பெருமையினை உயர்த்தி தமிழனால் எந்த ஒரு இலக்கையும் அடையமுடியும் என்று உறுதிப்படுத்தியுள்ளார். உலக அரங்கில் தமிழனின் கௌரவத்தை உயத்தி இசையுலகின் ஆட்டநாயகனாக திகழும் இசை மேதையின் வாழ்க்கையை நோக்க வேண்டியது அவசியமாகும்.

1966ஆம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி இம் மண்ணிலே ஏ.எஸ் திலீப்குமார் என்னும் பெயரோடு ஏ.ஆர் ராஹ்மான் அவதரித்தார் இவருடைய தந்தை சேகர் மலையாளப் பட உலகில் பிரபல இசையமைப்பாளாராகத் திகழ்ந்தவர். இவருடைய தயார் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர். ஏ.எஸ் திலீப்குமார் 9வயதாக இருக்கும்போதே தந்தையார் பரிதாபகரமாக உயிர்பிரிந்தார். இதனால் குடும்பம் மிக வறுமை நிலைக்குத் தள்ளப்பட வீட்டில் இருந்த தந்தையாரின் இசைக் கருவிகளையெல்லாம் விற்று வாழ்க்கை நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறாக தாயினது அன்பிலும் அரவணைப்பினும் வாழ்ந்த ஏ.எஸ். திலீப்குமார் இஸ்லாம் மதத்திற்கு மாறி ஏ.ஆர் ராஹ்மான் என தனது நாமத்தை மாற்றிக்கொண்டார். இவர் தனது இளவயது நண்பர்களான டிரம்ஸ் சிவமணி, ஜோன் அன்ரனி, ஜோஜோ, ராஜா ஆகியோருடன் இணைந்து கீபோட் பிளேயராக தனது இசைப்பயணத்தைத் தொடங்கினார் ஆரம்பத்தில் மாஸ்ரர் தனராஜிடம் இசை பயின்ற ஏ.ஆர்.ராஹ்மான் தன்னுடைய 11 வயதில் இசைஞானி இளையராஜாவிடம் கீபோட் கலைஞராக சேர்ந்தார். பின்னர் மெல்லிசை எம்.எஸ் விஸ்வநாதன், ரமேஸ்நாயிடு, குன்னக்குடி வைத்தியநாதன், எல் சங்கர் ஆகியோருடன் இனைந்து பணியாற்றினார்.

1992இல் ஏ.ஆர் ராஹ்மானின் இசைப்பயணத்தின் பரிணாம வளர்ச்சியாக "பஞ்சதன் ரெக்காட்" என்னும் பெயரில் இசைப்பதிவு மற்றும் இசைக்கலப்பு ஸ்ருடியோ தனியாக சொந்தமாக ஆரம்பித்தார். இவரின் ஸ்ருடியோ ஆனது அதி நவீன ரெக்காடிங் ஸ்ருடியோக்களில் ஒன்றாகக் காணப்பட்டது. தமிழ் திரை இசை உலகில் இவர் முதல் முதலில் பிரவேசித்த படம் மணிரத்தினம் இயக்கத்தில் உருவான "ரோஜா" என்னும் படமாகும். இப் படத்தில் சின்னஞ் சின்னஞ் ஆசைகள்.... என்னும் பாடல் இசையுலகில் ஒரு புரட்சியையும் திருப்பு முனையினையும் ஏற்படுத்த முனைந்தது. இதற்கு சிறந்த எடுத்தக்காட்டக இப் பாடல் தோன்றி பல ஆண்டுகள் ஆனாலும் இன்று வரை இப்பாடல் ரசிகர்களின் மனதை நின்று நீங்கவில்லை. இவர் இப் படத்தின் மூலம் முதல் படத்திலேயே தேசிய விருதைப் பெற்ற இளையமைப்பாளர் என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டார். இவ்வாறாக ஏ.ஆர் ராஹ்மான் ஆரம்ப வாழ்க்கைப் பயணங்கள் அமைந்தன.

இவரால் மேற்கைத்தேய இசையில் மட்டுமே சாதிக்க முடியும் என்ற விமர்சனம் பரவலாக எழுந்தது. இதனால் இவர் "கிழக்கும் சீமையிலே" "கருதம்மா" ஆகிய படங்களுக்கு இசை அமைத்ததன் மூலம் விமர்சன காரர்களுக்கு விசமளித்தார். இவருக்குத் தமிழில் "ரோஜா," "பம்பாய்," "ஜென்ரிமேன்," "காதலன்" போன்ற படங்கள் அழியாப் புகழைப் பெற்றுக்கொடுத்திருந்தன.. இவ்வாறு ராஹ்மான் திரையுலகில் பிரபலமடைந்திருந்த காலப்பகுதியில் பிரபல பாலிவூட் இயக்குனர் ராம்கோபால் வர்மாவின் "ரங்கீலா" படத்தினூடாக இந்தி சினமா உலகில் கால்பதித்தார் "ரங்கீலா" இன் பாரிய வெற்றியானது இவரை பாலிவூட்டில் தடம் பதிக்க வற்புறுத்தியது. இதனால் இவர் தில்சே, லகான், தால் போன்ற படங்களுக்கு இசை அமைத்து தனது வெற்றிப் பயணத்தை நீட்டத்தொடங்கினார். இதனால் இவருக்கு பல்வேறுபட்ட சர்வதேச வாய்ப்புக்கள் தேடிவந்தன. இதில் குறிப்பிடத்தக்க ஒன்றாக் ஜேர்மனில் மைக்கல் ஜக்சனின் இசை நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

இந்தியாவின் சுகந்திர பொன்விழாவின்போது ராஹ்மானின் "வந்தேமாதரம்" எனும் ஒலிநாடா வெளியானது. வந்தே மாதரத்தின் வெற்றியானது அவருக்கு உற்சாகத்தை அளிக்க "ஜன கண மண" எனும் ஒலிநாடா வெளிவந்தது. அதுவும் உலகத்தவர் அனைவரினதும் பாராட்டை பெற்றது. மேலும் அவர் ஐ.நாவின் வறுமை ஒழிப்புத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சமூக உணர்வோடு உருவாகிய பிரேபார் மீ பிறதர் என்னும் அல்பம் மிகவும் புகழ் பெற்றது.

இவர் 2005ம் ஆண்டில் **A.M** ஸ்ருடியோ தொடங்கி அதனை பஞ்வதனுடன் இணைத்தார். இவ்வாறாக இவரது இசைப் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கையில் கடந்த ஆண்டு வெளியான ஸ்லம்டாக் மில்லியனர் படம் இவருக்கு மிகவும் திருப்பு முனையாக அமைந்தது.

"ஸ்லம்டாக் மில்லியனர்" எனும் படமானது உலக திரைப்பட விழாவில் விருதுகளை வாரி குவித்த படமாகும். இப்படத்தின் இசைக்காக ராஹ்மானுக்கு "கோலிடர் குளோப்" "பாப்டா" "பிளாக்நீல் எவோர்ட் "புராட்காஸ்ட் பிலிம் கிரிட்டிக்ஸ் எவோர்ட்" "சேட்டிலைட் எவேட்ஸ்" போன்ற பல விருதுகள் கிடைத்தது. குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் முதன்முதலில் நான்கு தேசிய விருதுகளை பெற்ற இசையமைப்பாளர்கள் ராஹ்மான் மட்டுமே என்று கூறும்போது தமிழர்களின் மனங்கள் குளிர்ச்சியடைகின்றன. அத்துடன் "கோல்டன் குளோப்" "பாட்டா" விருதுகளை பெற்ற முதல் இந்தியரும், தமிழரும் இவரோருவர். இந்த வகையில் இன்று ராஹ்மானின் இசைத் தொகுப்புக்கள் உலகிலேயே மிக வேகமாக விற்பனையாகும் தொகுப்புக்களின் வரிசையில் ஆறாது நிலையிலுள்ளது.

திரைப்பட வராலாற்றிலே இசையமைப்பாளர் ராஹ்மான் இசைக்காகவே மட்டும் ஓடிய படங்கள் ஏராளம். 1990களில் இந்திய இசைத் துறையில் தனக்கென ஒரு தனிப்பாணியை வகுத்த தன்னிகரில்லா தலைவர் ஆவார். A.R ராஹ்மானுக்கு தனித்தமிழ் இனத்திற்கும் பெருமை தேடித்தந்த ஒஸ்கார் விருதை பெறக் காரணமாக அமைந்த "ஸ்லம்டாக் மில்லியனர்" எனும் படம் ஆகும். இவர் இசையமைத்த முதல் ஆங்கிலப் படமும் இதுவாகும். இவ்வாறாக A.R.ராஹ்மானின் ஒஸ்கார் பயணத்தில் மென்மேலும் ஒளிவீசட்டும். இரண்டு ஒஸ்கார் விருதுகளை பெற்று தமிழுக்கும் தமிழனுக்கும் மதிப்பையும் கௌரவத்தையும் ஏற்படுத்தித்தந்த "ஒஸ்கார் தமிழன்" A.R ராஹ்மானுக்கு தமிழர் என்ற ரீதியில் நாமும் வாழ்த்திசைப்போம்.




K.தினேஸ்
யா/ஹாட்லிக்கல்லூரி.

நிலா வளர வாழ்த்துகிறோம்...

# வரலட்சுமி உணவகம்





அம்மன் கோவிலடி வல்வெட்டித்துறை
T.P 2264842

நிலா வளர வாழ்த்துகிறோம்...

# Com-e



சகல விதமான போட்டோ பிரதி
இயத்திரங்களின் உதிரிபாகங்களும்
அதன் திருத்தமும் சகல விதமாக
ரோனர் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்

222 K.K.S ROAD
JAFFNA

021-222886
0776271500

# Bond between Science and Arts-

"science" and "Arts" are the two important fields of today's world Both fields are like two eyes of a man's Face So we must give the same significance to these two fields. But today people think that science is the must important and essential fields to this world. But their remark is really wrong because "science" can grow through Art. At the same time "Arts" can grow through science. So we must analyses this problem.

We can see this bond from the ancient time .In the "Ramayana" there is an air vehicle called "pushpak vimaana" It was used by "ravana" to take "seethaa" from "Ramaa" to Sri lanka. But we can't forget the service of Leonardo Darvinci between Science and Arts. Before the invention of helicopter and aero plane he drew the above air vehicles in his drawings.

So after the period of "Kamban" and darvinci Scientists invented aero plane and helicopter. So we can realize that scientist got the idea for their invention from the drawings of darvinci.

Before the invention of firearms, clock, parachute Darvinci drew the pictures of those scientific things in his drawings. Before scientific drew the picture of a baby in to the stomach of it's mother, Darvinci had drawn that picture. So scientists can be evoked by the drawings of Darvinci and they could invent above types of boots and the pictures of human body. The first artist who used lights and shadow gave hints to scientist to invent camera. Before the invention of the shape of microbe people gave many forms to the shape of microbe. But artist gave a sketch picture to microble. So scientist were evoked by that sketches and they invented a tool to see microble. Poet Hilaire Belloc shows us this idea in his poem "Microbe"

*"His jointed tongue that lies beneath*
*A hundred carious rows of teeth,*
*His seven tufted tails with lots*
*Of lovely pink and purple spots,*
*On each of which a pattern stands,*
*His eye brows of a tender green,*
*All these have never yet been seen,*

So we can't forget the service of art to the growth of science At the same time we can't forget the service of science to the growth of Arts. Production of films are the great example to this bond. At the start of twen teeth century we could only watch black and white films. So at that time people couldn't see the original colours of cinema stills. But today we can see colour films. So it is a gift to Arts from science. Today people enjoy fights dances and songs with great music in films. So producers of the film use the knowledge of science to give all the above features in a film in the film titanic, Jurassic Park, and king kong we can see the help of science to make this successful films. Because in Titanic they used great number of cameras to take one shoot.

At the some time we use computer typing machines, roneo systems to print our literary works we use television, radio, internet etc to broad cast our dramas, dances with songs and other programmes. So we can't expect a world only with science or Arts "Science" and "Arts" go hand in hand in the world.

◈ ◈ ◈

***Karavai Sajeev***
***J/Hardly College.***

# Genetic Engineering

In the fast growing developing world. We have to know about most of the wonderful matters held in the modern scientific world. In this wonders a important & excellent thing is "the Genetic Engineering".

We have to know about variation heredity before to see about genetic engineering. It is a important thing.

Firstly we'll know about variation. In the world people & all other living things vary in many ways. Infact no two living things are exactly alike even 'identical' twins differ in certain ways. Humans, for eg, all have the same general shape & body organs. How ever, characteristics suchas height, weight, shape of the face, knowledge, skills, body scars, etc: differ from one person to the next these characteristics are the egs of variation.

During sexual reproduction parents pass certain characteristics to their children. But not all characteristics can be in herited. A child in herits the shape of its face, nose & ears from one or other of its parents. But there is no chance what so ever of a child inheriting a knowledge of mathematics from its mother for eg or a scar which its father received in an accident.

Characteristics which can be inherited from parents are called hereditary characteristics. They include colouring of the hair, eyes and skins, shape of the face, ears, nose and mouth and all the other characteristics which develop as a child grows from a fertilized egg. Characteristics such as knowledge, skills, scars, etc, are called acquired Characteristics because people acquire them during their lives.


Some hereditary Characteristics show what is known as continuous variation. This means that there are many intermediate forms of the Characteristics so that they can begraded from of one extreme to other. Eg:- peoples sizes, such as height, weight in same age group.

Some Characteristics have few or no intermediate forms and so can n't be arranged in a continuous sequence. These Characteristics are described as showing discontinuous variation for Eg humans are either male or female, Ability some people have to roll their tongues into a u-shape.

Now we'll know about genetics. Genetics mean the scientific study of heredity. The Genes take part in genetics mainly. What is gene? A gene is a unit of heredity. Each gene controls the development of a set of hereditary Characteristics in an organism. In man it is estimated that there are about 10000 genes contained in the 46 chromosomes of each cell. Among this number there are genes which control the development of all the body organs, and others which control visible Characteristics rom. This technique allows genetic engineers to 'program' an organism to make useful substances. An example is the way in which a harmless bacterium called Escherichia coli (E-coli for short) found in the human gut can be changed into a tiny factory to mass-produce insulin for diabetics.

Now we'll see that how to get insulin from bacteria. The following steps are explain it. First is to isolate & cut out the single gene in human cells which controls insulin production.

Here the restriction enzymes use to cut the DNA. These enzymes are naturally occurring DNA 'cutters' which body cells use to dispose of damaged sections of DNA. Then the gene is inserted in to an E. coli cell where in combines with the microbe's DNA. Next bacteria transformed in this way are cultured in huge vats of nutrient until ready to have the insulin extracted from them.



Now the insulin extracted from cattle and pig pancreas.

Human growth hormones. Blood clotting chemicals for hemophiliacs, vitamins, vaccines, consume oil spills & antibiotics are some of the example get from the genetic engineering with help of E. coli These are help to cure the genetic & normal diseases in human bodies.

The latest techniques of genetic engineering involve transplanting genes from plants to plants & even from animals to plants. In one experiment genetic material from protein rich corn, barley, peas & carrots. It was hoped to make a single crop to provide a fully balanced meal. But we can n't know how much success give to us. According to this manner we can get more advantages through genetic engineering live without any diseases.

***Miss.A.Nishanthini***
***Intern ship,***
***2009***
***J.N.C.O.E***

| | சுவைத்திரள் |
|---|---|
| கல்வி<br><br>கவிதை | கசந்த பின் இனிக்கும்<br>ஆனால்<br>கலந்த பின் கண்ணாகும் |
| காப்பியம்<br><br>காதல் | முன்னர் சுகமானது<br>ஆனால்<br>பின்னர் சுமையானது |
| கிண்டல்<br><br>கிலி | நடக்கும் வரை தொடரும்<br>ஆனால்<br>நின்று பார்த்தால் முற்றும் |
| கீதம்<br><br>கீச் கீச் | பறவைகளிடம் உண்டு<br>ஆனால்<br>மனிதனிடத்தில் இல்லை |
| குயில்<br><br>குழந்தை | குரல்கள் இரண்டும் ஒத்து வரும்<br>ஆனால்<br>சந்தம் மாறும் |
| கூன்<br><br>கூடு | இரண்டிலுமே விளைவு உண்டு<br>ஆனால்<br>எதிர் எதிரானவை |
| கெட்டவன்<br><br>கெலி | குணத்தில் ஒத்தவன்<br>ஆனால்<br>வடிவத்தில் வேறுபட்டவை |
| கேலி<br><br>கேள்வி | இரண்டுமே வாயினால் செய்வது<br>ஆனால்<br>விளைவுகள் வேறுபட்டவை |

| | |
|---|---|
| கை<br><br>கைது | இரண்டிலுமே கைக்கு தொடர்பு உண்டு<br>ஆனால்<br>கை அணிந்திருப்பது வேறு |
| கொலை<br><br>கெம்பு | கொம்பால் கொலை செய்ய முடியும்<br>ஆனால்<br>கொலையால் கொம்மை பெற்று விட முடியாது |
| கோயில்<br><br>கோஸ்டி | கோயிலிலே கோஷ்டி நடக்கலாம்<br>ஆனால்<br>கோஸ்டியாகவே சண்டை நடக்கலாம் |
| கௌவுஸ்<br><br>கௌன்சில் | இரண்டுமே அமைப்புகள் தாம்<br>ஆனால்<br>நோக்கங்கள் வேறானவை |
| | தி.மகாராஜ்<br>டால்ரன் அக்டமி |


## கட்டைவேலி நெல்லியடி
## பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்

பல நுகர்ச்சிச் சேவையுடன் அதிக சேவைகளை மக்களுக்கு வழங்கி "கூட்டுறவே நாட்டுயர்வு" எனும் வாசகத்துடன் புதுப்பொலிவுடன் சேவையாறறுகிறது. இதன் சேவை மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

## **தமிழறிவு வினா விடைகள்** தொடர் -02

(ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு சார்ந்தவை)

*தொகுப்பாக்கம்*
*ஆசிரியர் வேல் நந்தகுமார்*
***(B.A.Hons in Tam, sp)***

01. ஈழத்தில் தோன்றி எமக்கு கிடைத்த முதற்றமிழ் நூல் எது?
    சரசோதிமாலை
02. சங்க இலக்கியங்களிலேயே பாடல்கள் பாடியுள்ளதாகக் கருதப்படும் ஈழத்தின் மூத்த தமிழ்ப்புலவர் யார்?
    ஈழத்துப் பூதந்தேவனார்
03. ஈழத்தில் தோன்றிய முதற்பள்ளு இலக்கியம் எது?
    கதிரைமலைப்பள்ளு (தமிழின் முதற் பள்ளு இதுவே)
04. ஈழத்தில் சுதேச நாட்டியம் என்ற பத்திரிகையை நடத்திய புலவர் யார்?
    கல்லடி வேலுப்பிள்ளை
05. ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த கிறிஸ்தவக் காவியம் எது?
    திருச்செல்வர் காவியம்
06. ஈழத்தில் அதிக பிரபந்தங்கள் பாடிய பெருமைக்குரிய புலவர் யார்?
    உடுப்பிட்டி சிவசம்புப்புலவர்
07. நல்லை நாவலன் கோவை தந்த ஈழத்துத் தமிழ் இலக்கண வித்தகர் யார்?
    கந்தமுருகேசனார்
08. வசனநடைகைவந்த வல்லாளர் எனப் போற்றப்பட்ட ஈழத்தறிஞர் யார்?
    நல்லைநகர் ஆறுமுகநாவலர்
09. ஈழத்துப் பதிப்புச் செம்மல் எனப் போற்றப்பட்டவர் யார்?
    சி.வை.தாமோரம்பிள்ளை
10. ஈழத்தில் எழுந்து இன்று எம் கைகளுக்கு கிடைக்கும் முதற்றமிழ் அகராதி எது?
    யாழ்ப்பாண அகராதி அல்லது மானிப்பாய் அகராதி
11. ஈழத்தின் முதற்பெண் நாவலாசிரியை யார்? அவர் எழுதிய நாவல் எது?
    மங்கைநாயகம் தம்பையா நொறுங்குண்ட இதயம்
12. மஞ்சு காசினியம் அல்லது இயங்குதமிழியல் என்ற இலக்கண நூலை எழுதி அண்மையில் அமரரான ஈழத்துப் பல்துறை வித்தகர் மதுரைப்பண்டிதர் யார்?
    பண்டிதர் சச்சிதானந்தன்

13. தமிழ்த்தூதர் எனப் போற்றப்பட்ட ஈழத்துத் தமிழ் அறிஞர் யார்?
தனிநாயகம் அடிகள்

14. ஈழத்தில் இருந்து இன்றும் தொடர்ச்சியாக அதிக காலம் (40 ஆண்டுகளுக்குமேல்) வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகை எது?
மல்லிகை.

15. அண்மையில் தனது நூறாவது இதழை வெளியிட்டு ஈழத்து இலக்கிய உலகிற்கு பெருமை சேர்த்த சஞ்சிகை எது?
ஞானம்

16. ஈழத்துத் தமிழ் நாடகத் தந்தை எனப் பொற்றப்பட்டவர் யார்?
கலையரசு சொர்ணலிங்கம்

17. ஈழத்தின் முதற் சாதிய நாவலை எழுதியவர் யார்?
சொக்கன் (சீதா)

18. ஈழத்தின் முதற்தமிழ் நாவல் எது? அதனை எழுதியவர் யார்?
அசன்பேயின்கதை அறிஞர் சித்திலெப்பை

19. தமிழகத்தில் மணிக்கொடி போல் ஈழத்தில் நிலவிய இலக்கிய வளர்ச்சிக் காலத்தின் பெயர் என்ன?
மறுமலர்ச்சிக்காலம்

20. சில ஆண்டுக்கு முன் மறைந்த ஈழத்தின் மறுமலர்ச்சிப் படைப்பாளர் யார்?
தி.ச.வரதராசன் (வரதர்)

21. ஈழத்தில் மொழி, ஒப்பியல் ஆய்வு முன்னோடிகளாய் விளங்கும் ஆய்வுத் தம்பதியர் யாவர்?
பேராசிரியர் அ.சண்முகதாஸ்,
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

22. ஈழத்து மகாகவியால் தமிழிற்கு அறிமுகம் செய்யப்பட்ட பா வடிவம் எது?
குறும்பா

23. அண்மையில் பவள விழாக் கண்ட ஈழத்தின் மூத்த தமிழ்ப் பேராசிரியர் யார்?
பேராசிரியர் கா.சிவத்தம்பி

24. ஈழத்துத் தமிழ் உரைமரபு என்ற நூலை எழுதியவர் யார்?
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா

25. இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகளை தொகுத்து வெளியிட்டவர் யார்?
ஸ்ரீபிரசாந்தன்

***அறிவு வளரும்.....***

# அறிவியல் உண்மைகள்

01. அளவுக்கு மிஞ்சிய உப்பு சேர்க்கப்பட்ட உணவை உட்கொள்பவருக்கு அதிக தாகம் ஏற்படுவதற்கான காரணம்

*உட்கொள்ளப்பட்ட மேலதிக உப்பை வெளியேற்ற உடலிருந்து நீர் சிறு நீராக வெளியேற்றப்படுகின்றது எனவே தான் அதிகமான தாகம் ஏற்படுகின்றது.*

02. மழைபெய்யும் போது அல்லது அதற்கு முன்னர் மின்னல் உண்டாகிறதுஏன்?

*மழை பெய்யும் போது அல்லது அதற்கு முன் மேகங்களில் உள்ள மின்னேற்றம் குறைந்து காணப்படும் இம் மேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதும் போது மின்னேற்றம் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு பாய்கின்றது இதன்போதே மின்னல் தோன்றுகின்றது.*

03. பனிக்கட்டி உருகாமல் இருக்க ஏன் மரத்தூளினை இடுகின்றனர்

*மரத்தூள் வளியிலுள்ள வெப்பத்தை வாங்கிப் பனிக்கட்டிக்குக் கொடுக்காது ஆகவே பனிக்கட்டி உருகமாட்டாது.*

04. பேனாக்களின் பெரும் பகுதி ஏன் பிளாஸ்ரிக்கினால் செய்யப் பட்டுள்ளது?

*பிளாஸ்ரிக் வெப்பத்தைக் கடத்தாது எனவே மை கசியாது மற்றும் விலை குறைவு*

*இ.விதுஷன்*
*யா/இந்துக்கல்லூரி*
*யாழ்ப்பாணம்*

## பாராட்டுக்குரியவர்கள்



யாழ்ப்பாண வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியராகிய திரு.இரா.இராஜேஸ்கண்ணன் [M.A] அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் "சமூகவியல்" துறை நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்றமையினையிட்டு அவரது செயற்பாடுகள் மேலும் எமது சமூகத்துக்கு பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்துகின்றோம். அத்தோடு இவர் ஈழத்தின் மிகச்சிறந்த இளம் சிறுகதைப்படைப்பாளி என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நடைபெறவுள்ள தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் கலந்து கொள்ளும் யாழ் மாவட்ட மாணவர்களை வாழ்த்துவதோடு தமிழறி வினாவிடைப் போட்டிக்காக தேசிய மட்டம் செல்லும் யா/விக்னேஸ்வரக் கல்லூரி மாணவிகளாகிய ஜெ.அர்ச்சனா , பு.ஜீவனா, க.பிரியந்தினி, சி.சஜிதா, ந.துவாரகா ஆகியோரையும் திறனாய்வுப் போட்டிக்குச் செல்லும் பு.ஜீவனாவையும் வாழ்த்துவதுடன் இவர்களை நெறிப்படுத்திய கல்லூரிச் சமூகத்தையும் வாழ்த்துகின்றோம்.



யாழ்ப்பாணப்பல்கலைக்கழக தமிழ்த்துறையின் உதவி விரிவுரையாளராக அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ள பல்துறைப் படைப்பாளர் த.அஜந்தகுமார் அவர்களை வாழ்த்துவதில் புதிய நிலா மகிழ்கிறது.

புதிய நிலாவின் பராட்டுக்குரியவர்கள் என்ற பக்கத்தில் நிலா அறிந்தவர்களை பராட்டி இருக்கிறது. இலைமறை காயாக ஒவ்வொரு பிரதேசத்திலும் இருக்கின்ற கல்விப்புலம் சார்ந்த மற்றும் பல்துறை சார்ந்த சாதனையாளர்களை இனங்கண்டு அவர்களை எங்களுக்குத் தெரியப்படுத்துமாறு வாசகர்களைத் கேட்டுக்கொள்கின்றோம்.

# நற்செய்தி ........

பல மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய நிலா கலை இலக்கிய சஞ்சிகையில் இருந்து வேறாக பொது அறிவு தொடர் போட்டி நடைபெறுகின்றது. என்பதை அறியத் தருகின்றோம்

## யாழ்மண்ணில் நிலாமலரும் நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| டால்ற்ரன் அக்கடமி | - | துன்னாலை |
| புலோலி கல்வி நிலையம் | - | புலோலி |
| உதயதாரகை | - | கொற்றாவத்தை |
| நியு பிறைற்றின் | - | இமையானன் |
| யாழ்பிக்கன் | - | கரணவாய் |
| அறிவகம் | - | அச்சுவேலி |
| ஸ்ரார் | - | அச்சுவேலி |
| கலையகம் | - | ஆவரங்கால் |
| நாவலர் | - | ஆனைபந்தி |
| **BECON** | - | யாழ்ப்பாணம் |
| **DMI** | - | யாழ்ப்பாணம் |
| பொருளியற் கல்லூரி | - | யாழ்ப்பாணம் |
| பிறைற்மன் | - | யாழ்ப்பாணம் |
| நியூட்டன் அக்கடமி | - | கோண்டாவில் |
| **SMS** | - | யாழ்ப்பாணம் |
| யாழ் கல்லூரி | - | ஆறுகால் மடம் |
| ஸ்ரார் | - | சுண்ணாகம் |
| சக்தி | - | சுண்ணாகம் |
| விக்னா | - | யாழ்ப்பாணம் |
| எடிசன் | - | யாழ்ப்பாணம் |

# வைஷ்ணவி நகைப்பூங்கா




*தரமான 22 கரட்*

*தங்க நகைகளுக்கு*

*நீங்கள் நாடவேண்டிய வடமராட்சியில்*

*முன்னணி தங்க நகைமாளிகை*

பிரதான வீதி, நெல்லியடி.

021 2264519



# U.S.C

**உதயதாரகை கல்வி கழகம், கொற்றாவததை**

தரம் 1 - 11 வரையான வகுப்புக்கள் A/L கலை
வகுப்புக்கள் புலமைப்பரிசில் விசேட கணித ஆங்கில
வகுப்புக்களும் நடைபெறுகின்றன.


புதிய நிலா
வளர வாழ்த்துகிறோம்....
உங்கள் நவீன ஆடைத்
தெரிவுக்கு வடமராட்சியில்.........
செல்லமுத்துஸ்
புடவை மாளிகை
Latest Designs of Textiles
SELLAMUTHUS
TEXTILES
பிரதான வீதி, நெல்லியடி.
Main Street, Nelliady.
Tel:- 0212263238